Registered at the G. P. O. as a Newspaper
வாரப்பதிப்பு விலை சதம் 15

முக்கிய அறிவித்தல்
30-1-1966 வரைக்கும்
ஐம்பது மில்க்வைற் நீலசோப்
மேலுறை சேர்த்துத் தருபவர்களுக்கு
ஒரு அழகான சாக்குப் பையும்
ஒரு புத்தாண்டு கலண்டரும்
அன்பளிப்பாகக் கொடுக்கப்படும்.

ஈழநாடு

மலர் 7 EELA NADU இதழ் 317
தேசிய தினசரி National Tamil Daily

விசுவாவசு மார். 11 றம்ழான் 2 (26-12-65) ஞாயிற்றுக்கிழமை

## டாஷ்கண்ட் சந்திப்பு

லண்டன், டிச. 25

இந்தியப் பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரி ஜனவரி மாதம் மூன்றும் திகதி புறப்படுவார். பாகிஸ்தான் அதிபர் பீல்ட்மார்ஷல் அயூப்கான் ஜனவரி மாதம் நான்காம் திகதி டாஷ்கண்டில் இருப்பார்.

இந்திய, பாகிஸ்தான் தலைவர்களிடையே ஜனவரி 4-ம் திகதி நடைபெறும் பேச்சுக்களில் ரஷ்யப் பிரதமர் கோஸிஜின் கலந்து கொள்வார்.

# கிறிஸ்மஸ் யுத்த நிறுத்தம்

## வியட்னுமில் பூரண அமைதி நிலவியது

### சண்டை வேண்டாமென தலைவர்கள் கோரிக்கை

லண்டன், டிச. 25

தினசரி நூற்றுக்கணக்கான அமெரிக்க போர்விமானங்களின் அதிபயங்கர குண்டு வீச்சுகளுக்கும் வியட்காங்கியரின் தந்திரமான தாக்குதல்களுக்கும், தென் வியட்னும், அமெரிக்க, ஆஸ்திரேலிய படைகளினது பீரங்கித் தாக்குதல்களுக்குமிடையே சிக்கித் 'தவித்து' யுத்தகளமாகக்காட்சியளித்துக் கொண்டிருந்த வியட்னும், நேற்றிரவிலிருந்து ஒரே அமைதியாகக் காட்சியளித்தது.

இப்பிரதேசத்தில் வானத்தில் போர்விமானங்கள் பறக்கவில்லை. படையினா தங்களது ஆயுதங்களை கைகளில் ஏந்தவில்லை. பூரணஅமைதி நிலவியதாக இன்று பகல் வரை கிடைத்த செய்திகள் கூறுகின்றன.

கிறிஸ்மஸ் போர் நிறுத்தத்தை வட வியட்னுமும், தென் வியட்னுமும் பூரணமாகக் கடைப்பிடித்தனஎன்றும் அறிவிக்கப்பட்டது.

**கோரிக்கை**

கிறிஸ்மஸ் தினத்தின் போது யுத்தநிறுத்தத்தைக் கடைப்பிடிக்குமாறுபரிசுத்த பாப்பரசர் போல் உட்பட உலகத் தலைவர்கள் பலர் வடக்கு வியட்னுமையும் அமெரிக்காவையும் கேட்டுக்

(10-ம் பக்கம் பார்க்க)

## தமிழ் மொழியில் அரசாங்க விதிமுறை

கொழும்பு, சனி

அரசாங்க காரியாலயங்களின் அலுவல்கள் சம்பந்தமான சில விதிமுறைகள் விரைவில் தமிழில் வெளியாகவிருக்கின்றன. இந்த விதிமுறைகள் தமிழ் மொழியில் ஏற்கனவே பிரசுரிக்கப்பட்டு புத்தகங்களாகிவிட்டன என்றும் ஓரிரு வாரங்களுக்குள் வெளியே விற்பனைக்குவிடப்படலாம் என்றும் அறியப்படுகிறது.

பொதுச்சேவை ஆணைக்குழு விதிகள் இம்முறை தமிழிலும் வெளியாகி இப்பொழுது விற்பனைக்கு விடப்பட்டுள்ளன. இதேமாதிரி அரசாங்க நிதிப்பிரமாணங்கள், அரசாங்க நடைமுறை கைநூல் ஆகியன அண்மையில் வெளியாகவிருப்பதாகத்தெரிய வருகிறது. இவை ஏற்கனவே தமிழில் அச்சிடப்பட்டு புத்தகங்களாகிவிட்டன என்றும் கூறப்படுகிறது.

அரசாங்க நிதிப்பிரமாணங்கள், அரசாங்க நடைமுறை கைநூல் ஆகியன இதுவரைகாலமும் ஆங்கிலத்திலும், சிங்களத்திலுமே வெளியிடப்பட்டன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மயிலிட்டி அருகே

## சட்டவிரோதக்காரர் 9 பேர் கைது

### ரூபா 500பெறுமதி கட்டுமரம்கைப்பற்றப்பட்டது

மாவிட்டபுரம், சனி

காங்கேசன்துறை சட்டவிரோத குடியேற்றத்தடுப்பு பொலிஸ் நிலையத்துக்கு நேற்று சனிக்கிழமை காலை கிடைத்த இரகசிய தகவலைத் தொடர்ந்து உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஏ. எச். எம். ஜபார் தலைமையில் சென்ற பொலிஸ்கோஷ்டியினர், மயிலிட்டி காசநோயாளர் ஆஸ்பத்திரிக்கு மேற்கேயுள்ள கடற்கரையில் வந்திறங்கிய ஒன்பது சட்டவிரோதக் குடியேற்றக்காரரை கைதுசெய்ததுடன், அவர்கள் வந்ததாகக் கூறப்படும் 500 ரூபா பெறுமதியான கட்டுமரத்தையும் கைப்பற்றியுள்ளனர்.

சட்டவிரோதக் குடியேற்றக்காரரெனக் கைதுசெய்யப்பட்ட 9 பேரும் தஞ்சாவூர் ஜில்லாவைச் சேர்ந்த வேதாரணியம் எனும் இடத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், இவர்கள் வந்த கட்டுமரத்தை 9 பேரும் தலா 50 ரூபா வீதம் கொடுத்து வாங்கினுர்கள் என்றும், பொலிஸ் விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது.

சட்டவிரோதக் குடியேற்றக்காரர்கள் தற்பொழுது பொலிஸ்பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர். கட்டுமரமும் கைப்பற்றப்பட்டு பொலிஸ்பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட ஒன்பது பேரில் ஐந்துபேர் முன்னர் இலங்கையிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்கள் என விசாரணையின் போது தெரியவந்தது.

வடபகுதி கடற்கரைஓரங்களில் இராணுவத்தினர் சேவையில் நிறுத்தப்பட்ட பின்னர் சட்டவிரோதக்குடியேற்றக்காரர்கள்கடற்கரையில் இறங்கும் பொழுது கையும் மெய்யுமாகப் பிடிபட்டது இதுவே முதலாவது தடவை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

பாத்திரங்கள் வாங்கும் பொழுது
டொலர் மார்க் என்றே கேளுங்கள்

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்




டொலர் கோர்ப்பரேஷன்
14. டாம் வீதி கொழும்பு

உற்பத்தியாளர்கள்:
அலுமினிய தொழிற்சாலை
மாவிட்டபுரம்

சிசு மரணம்

## கணவனுக்கு றிமாண்ட்; மனைவி பிணையில் விடுதலை

யாழ்ப்பாணம், ஞாயிறு

மண்கும்பானில் ஒரு சிசு மரணம் சம்பந்தமாக சந்தேகத்தின்மீது கைது செய்யப்பட்ட இளம் பெற்ரேர்கள் ஊர்காவற்றுறை மாஜிஸ்திரேட் திரு. ரி. ஜே. ராஜரத்தினம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட பொழுது சிசுவின் தந்தையான திரு. சதாசிவத்தை அடுத்த வருடம் ஜனவரிமாதம் 13-ம் திகதி வரை றிமாண்டில் வைக்கும்படி மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார். சிசுவின் தாயாரான திருமதி சதாசிவம் அன்னலெட்சுமியை 200 ரூபா பிணையில் செல்லுமாறு மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார்.

மண்கும்பானில்உயிருடன் பிறந்த அழகான பெண் குழந்தையின் மரணம் சம்பந்தமாக இந்த இளம் பெற்ருேர்கள் கைது செய்யப்பட்டனர்.

இச்சிசுவின் மரணம் குறித்துடாக்டரின்அறிக்கை இன்னும் கிடைக்காததால் அவருக்கு 'சம்மன்ஸ்' பிறப்பிக்குமாறு மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார்.

எதிரிகளின் சார்பில் அட்வக்கேட் திரு ரி. கணேசலிங்கம், புறக்டர் திரு. கதிரவேலுப்பிள்ளையின் அனுசரணையுடன் ஆஜரானுர். விசாரணை மீண்டும் ஜனவரி 13-ல் நடைபெறும். ந. நி.

## சிவாலயம் புனருத்தாரணம்

மாவிட்டபுரம், சனி

மன்னுர் மேற்குமூலைப் பகுதியைச் சேர்ந்த இரணை இலுப்பைக்குளத்தில் உள்ள புராதன சிவாலயம் புனருத்தாரணம் செய்யப்படவிருக்கிறது.

பழம்பெருமை வாய்ந்த இக்கோவில் இதுவரைகாலமும் கவனிப்பாரற்றநிலையில் இருந்துவந்தது. இப்பொழுது இக்கோவிலுக்காக திருப்பணிச்சபையொன்று நிறுவப்பட்டுள்ளது. அதன் தலைவராக திரு. நெ. பாக்கியநாதன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். திருப்பணிச்சபை எதிர்வரும் திருவெம்பாவை உற்சவத்தைச் சிறப்பாகக் கொண்டாடுவதெனவும் அர்ச்சகரை மாவிட்டபுரத்திலிருந்து வரவழைப்பதெனவும் தீர்மானித்துள்ளது.

இக்கோவிலின் மூலமூர்த்தி [illegible] லிங்கம் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ். ஆஸ்பத்திரி

## பணியாளர் இடமாற்றம்: ரத்துச் செய்யுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி பணியாளர்களின் இடமாற்றங்கள் ஆஸ்பத்திரி கமிட்டியினது கோரிக்கையின்மீது செய்யப்பட்டிருப்பதாக அகில இலங்கை சுகாதார இலாகா தொளிலாளர் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

அகில இலங்கை சுகாதார இலாகா தொழிலாளர் சங்கம், ஆஸ்பத்திரி கமிட்டியினரது நடவடிக்கையை ஆராய விசாரணை செய்யுமாறு சங்கம் அமைச்சரைக் கோரியுள்ளது. அந்த ஆஸ்பத்திரிக் கமிட்டி உறுப்பினர்களது வேண்டுகோளுக்கு அரசாங்க ஊழியர்களான ஆஸ்பத்திரிப் பணியாளர் பணியாமையேகாரணமெனவும் வைத்தியசாலை நிர்வாகத்தில் அனுவசியமாக இக்கமிட்டி உறுப்பினர்கள் தலையிடுவதாகவும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

குறிப்பிட்ட சங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கையைத் தொடர்ந்து யாழ்ப்பாண வைத்தியசாலைக்கு வெளியேஇடமாற்றம் செய்யப்பட்டசகலரது இடமாற்றமும் மாவட்ட ரீதியில் கொடுக்கசுகாதார அமைச்சு இணங்கியுள்ளது.

பொருள் காப்பாளரான சில பணியாளர்களின் இடமாற்றத்தை ரத்துச் செய்யுமாறு சங்கம் கோரியுள்ளது. சமீபத்தில் யாழ்ப்பாண வைத்தியசாலையில் ஏற்பட்ட உடை, பொருள் மோசடிகள் பற்றிய விசாரணை இந்த இடமாற்றத்தால் தட்டிக்கழிக்கப்படலாமெனச் சங்கம் எடுத்துக்காட்டியுள்ளது. பொருபட்ாதுகாப்புப் பணியாளர்களின் இடமாற்றத்தை ரத்துச்செய்யுமாறும் சங்கம் கோரியுள்ளது. ந. நி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நோயும் சிகிச்சையும்— 11

# முகத்தை விகாரப்படுத்தும் முகப்பரு

### க. வேல்மணி

உடம்பின் மற்றெந்தப் பாகத்தையும் விட முகத்திலும்மார்பிலுமே அதிக எண்ணெய்க் கோளங்கள் அமைந்திருக்கின்றன. இந்த இடங்களில் தான் பரு அதிகமாக உண்டாகின்றன. பெண்கள், சிறுபையன்கள், இளம் யுவர் யுவதிகளுக்கும் பரு அதிகமாக உண்டாகின்றன.

பருக்கள் வருவதன் காரணம்

1. உடல் தூய்மையின்மை.
2. ஜீவசத்தற்ற உணவு.
3. உஷ்ணமான சூழ்நிலை.

பெரும் பகுதியும் உடல் தூய்மையின்மையினல் தான் பருக்கள் அதிகமாக உண்டாகின்றன. மற்றவர்கள் உபயோகித்த சவர்க்காரம், கைக்குட்டை, துவாய், முதலிவற்றால் முகத்தைத் துடைப்பது, அதி வெயிலில் திரிவது, அசுத்த நீரால் முகத்தைக் கழுவுவது, முத்தமிடுதல் என்பன முகப்பருக்கள் உண்டாவதற்கு காலாகின்றன. ஒருவருக்குமுன் 6 அடி எட்டவே நிற்கவேண்டும். அல்லது கிருமிகள் அவரின் வாயிலிருந்து தொற்றுவதற்கு ஏதுவாகின்றது.

பருவுள்ளவர்கள் தினம் 2 தடவை தங்கள் முகத்தை நீர் கலந்த கிருமிநாசினியால் கழுவியபின்னர்லற்ரே அல்பா (Lotio Alba) என்ற மருந்தைப் பஞ்சினல் பருவுள்ள இடங்களில் பூசி 3 மணி நேரம் சென்றதன் பின்னர் கிருமி கொல்லும் சவர்க்காரத்தால் சுத்தம் செய்தபின்பு சிறிது றப்பிங் அல்கஹோல் (Rubbing Alco-hol) தேய்த்துவிட்டு அயடினில் (Iodine) தோய்த்தெடுத்த ஊசியால் பருக்களைக் குத்திச் சீழை அகற்றுங்கள். குழந்தைகளிடம் பருக்களைப் பிதுக்கி விடாது எச்சரிக்கையாகப் பார்த்துக் கொள்ளவேண்டும். தகாத விதமாய்ப் பிதுக்கிவிட்டால் பருவின் கீழுள்ள சவ்வு கிழிந்து வடு ஏற்படும். சில பருக்கள் முகத்தையே விகாரப்படுத்திவிடுகின்றன.

பருஉள்ளோர் வெளிப்பிரயோகமாகப் பூசுவது

இலவம் துளிர்களைப் பாலில் அரைத்துப் பூசவும் அல்லது நாவல்துளிர், மாந்துளிர், மஞ்சள், மரமஞ்சள், வெள்ளிலோத்திரம் முதலியவற்றை கசாயம் செய்து சந்தனம் சேர்த்தரைத்துக் காலை மாலை முகத்தில் பூசிவரவும்.

இரவில் நித்திரைக்குப்போகும் பொழுது

வெட்டி வேர், இலாமிச்சம் வேர், வெண்சந்தனம் முதலியவற்றின் ஊறல் நீரால் முகத்தைக் கழுவ வேண்டும்.

சிலவகை ஆகாரங்களை பருக்கள் உள்ளநேரத்தில் நீக்குங்கள்

கொட்டைப்பருப்பு வகை, பாலாடைக்கட்டி, இனிப்புப் பண்டங்கள், மாப்பதார்த்தங்கள், நெய், எண்ணெய், பொரித்த உணவுகள் பரு உள்ளபொழுது உபயோகத்தில் குறைத்தல் நன்று.

கோப்பி, தேநீர், கொக்கோ முதலியவற்றையும் பரு உள்ள நேரங்களில் குறைத்தல் நல்லது. இதற்கு காரணம்அதிகமான அயடின் (Iodine) உணவில் கூடி இருந்தாலும் பருக்கள் அதிகமாக உண்டாகக்கூடும் என்பதாம்.

பருஉள்ள நேரங்களில் உபயோகிக்கும் பழவகைகள்

வாழைப்பழம், திராட்சைப்பழம், மாம்பழம், பலாப்பழம், தக்காளிப் பழம் முதலியன உணவில் எப்பொழுதும் சேர்ந்திருக்க வேண்டும்.

பரு உள்ள நேரங்களில் நோயாளி சுத்த நீர்நிறைய அருந்தவேண்டும். சிறுகுழந்தைகளைத் தாய்மார்கள் வேறு யாரிடமும் முத்தமிடவோ, சொக்குகளில் கிள்ளவோவிடக்கூடாது. குழந்தைகளை ஒன்பது மணிநேரம் தூங்கவிடவேண்டும். அல்லது சூட்டின் காரணமாக பரு உண்டாகலாம். கண் விழித்து படிப்பதைக்குறைக்கவேண்டும். இவற்றால் பருக்கள் வராது தடுக்கலாம். நல்ல சத்துள்ள உணவு வகைகள்சாப்பாட்டில்சேர்ந்திருத்தல்வேண்டும். காலை, மாலை பால்குடித்தல்வேண்டும். நல்ல திறந்த இடத்தில் தேகாப்பியாசம் செய்ய வேண்டும். இப்படிச்செய்வதினால் பருக்கள் வராதுதடுப்பதற்கு வழியாக இருக்கும்.

---

## துறவிமனத்தில் பிறந்த

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

காணமுடிகின்றது. பாண்டிய வேந்தன் பொது மகளின் நடனத்தில் இலயித்திருப்பது, பாண்டிய அரசிக்கு கோபத்தை உண்டாக்குகின்றது.

இந்த நிலையிலேயே அரசியின் சிலம்பைத் திருடிய கள்வனுக கோவலன் அகப்பட்ட செய்தி தெரிவிக்கப்பட்டபோது, பதற்றநிலையில் "கள்வனைக் கொன்றுசிலம்பைக் கொண்டுவா" என்று கூறுகின்றான். கோவலனைக் கொன்ற கொலையாளியும் சுயநிலையற்ற மதுவின் மயக்க நிலையில் இருந்திருக்கிறான். இவ்வாறான கீழான நிலையில் கோவலன் கொலைசெய்யப்படுகின்றான். கண்ணகியால் நீதி நிலைநாட்டப்படுகிறது. மதுரை எரிகின்றது.

பொதுமகளிர் போன்றோர் அழிந்து படுகின்றனர். ஆனால் இன்றும் பாவிகள் எரிக்கப்படா நிலையையே காணமுடிகின்றது.

கற்புடைய பெண்களாக மட்டும் இருப்பதால் பெண்மை பொலிவதில்லை. அவர்கள், கலையிலும் போற்றவேண்டும். கணவன் கற்பையும் கலையையும் ஒருங்கே மனைவியிடம் காணுவதில் விருப்பமுறுவான் என்பதை சிலப்பதிகாரம் காட்டுகின்றது. கணவன் இறப்பதற்கு காரணமான பாண்டியனையும்இறுதியில் 'என்தகப்பன்' என்று கூறும் அந்த அன்பு நிலையில் கண்ணகி தெய்வமாகின்றாள்.

படையெடுத்துச் செய்யக்கூடிய புரட்சியை விட மேலான புரட்சியைப்பெண்களால் செய்யமுடியும் என்பதை இளங்கோ அறிந்து பாடியுள்ளார். அவரின் துறவு உள்ளத்தில்தான் காவியம் பிறந்துள்ளது. அண்ணனுக்காக அரசைத்துறந்த தன்னலமற்ற அன்பு நிலையை அண்ணன் முகம் கோணமுடியாது என்ற நாகரிகத்தை இளங்கோ. தனது வாழ்வில் காட்டியுள்ளார். ஆடம்பரமாக சூட்டும் - கோட்டும் போடுவது நாகரிகமல்ல.

"பெயக்கண்டு நஞ்சுண்டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டுபவர்"

என்பதன்படி தன்னலமற்ற தன்மையிலேதான் காப்பியம் வளர்கிறது. அரசனுகிய செங்குட்டுவனுக்கு மேலாக தமிழகம் மட்டுமன்றி இலங்கையும் கொண்டாடுமளவுக்கு இளங்கோ கவிச்சக்கரவர்த்தியாகிவிட்டார்.

பெண்ணைத் தெய்வமாக்கும் கதைதான் சிலப்பதிகாரம். கண்ணகியிடம் ஓடிய இரத்தம் எமக்கும் உண்டு. புரட்சி நம்மாலும் செய்ய முடியும் என்ற ஊக்கம் தமிழ்ப் பெண்களுக்கும் வரவேண்டும். எவரையும்நோகாமலே இளங்கோ எழுதிச் செல்கின்றார். அவரின் உள்ளம் தாய்மை உள்ளம். பரந்த உள்ளம். தாய்மையுள்ளத்துடன் நாட்டைக்காக்க உலகம் வாழ நமது நாகரிகத்தை வளர்க்கவேண்டும். சிலப்பதிகாரம் மூலம் இவ் வடிப்படையில் தெய்வமாவோம். அல்லது மனிதராகவாவது பாரிலே வாழ்வோம்.

(இது, விவேகானந்தசபையில் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம். தொகுத்தவர்: க. நவசோதி)

---

## வரி விளம்பரம்

'அரியம்ஸ்' பிளவுஸ், சன்சூட்ஸ் பெற்றன் புத்தகங்கள் எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம். வி. பி. பி. ஓடர்கள் விசேஷ கவனம் செலுத்தப்படும். எஸ். சவிரிமுத்து, 73, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 1634

### விற்பனைக்கு

3 ஸ்ரீ 250 ஸி ஸி மோட்டோர் சைக்கிள். சிறந்த நிலை. இரு ரயர்களும் புதிது. விரும்புவோர் வே. முத்துக்குமாரு ஆயிலி, காரைநகரைச் சேர்ந்தவரை விசாரிக்கவும். 1625

ஆஸ்பத்திரி, பிரதான பாடசாலைகள், சந்தை, புகையிரதஸ்தானம் இவைகளுக்கு மிகவும் அருகாமையில் காணி நிலப்பரப்பு 7 பரப்பு, பலா, மா அடங்கியவை விற்பனவுக்கு இருக்கின்றது. விரும்பியோர் நேர்முகமாகவோ அல்லது தபால்மூலம் கீழ்க்காணும் விலாசத்துக்கு தொடர்பு கொள்ளவும். இ. தனகரத்தினம், கச்சாய் ரோட்டு, சாவகச்சேரி. 1624

### சோதிடம்

சோதிடத் துறையில் நுணுக்கமான கணிப்பு, மாந்திரீகத்தின் துணையுடன். வெற்றிக்கு உத்தரவாதம். விடயங்கள் அனைத்தும் அந்தரங்கமாக வைக்கப்படும். தினமும் பலர் பயனடைகின்றனர். பாராட்டுதல்கள் குவிந்தவண்ணம் இருக்கின்றன. நாட்டின் பிரமுகர்களின் நல்லாதரவைப் பெற்றிருப்பவர். விபரங்களுக்கு பத்துச்சத முத்திரையுடன் தொடர்பு கொள்க:- சோதிடக்கலாநிதி க. வேலுப்பிள்ளை, "மங்களேஸ்வரி சோதிட நிலையம்", திருக்கோணமலை. 1380

### வைத்தியம்

**தொய்வு, கசம், நீரிழிவு நீரந்தி** முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### ஞாபகார்த்தம்

-குருமோகன் இராமலிங்கம்-

அன்புச் செல்வமே! இந்த ஓராண்டு காலம் எம்முள்ளத்தை மெல்ல மெல்லத் திருகிப் பிழிந்து கழிந்துவிட்டது. ஆனால் நீர் எம்மை விட்டுப்பிரிந்த அதிர்ச்சி இன்னமும் தீரவில்லை. உமது அழகும், புத்திசாலித்தனமும் இறைவனின் கண்ணில் பட்டுவிட்டதாலா உம்மை அழைத்துத் தன்னருகே வைத்துக் கொண்டான். உமது பசுமையான மழலை மொழி காதில் ஒலிக்கிறது. எம்முள்ளத்தில் என்றும் நீர் நீங்காதுவாழ்கின்றீர்; என்றாலும் ஓ, எம் குஞ்சுக்குருவே! உம்மைக்காண, கண்டு தழுவ ஏங்குகிறோம். உமது பிரிவால் வாடும் அப்பா, அம்மா, சசி, வாணி, அப்பு, அம்மாம்மா, சித்திமார், மாமா- "குருவாசா" காங்கேசன்துறை. 1632

### வாடகைக்கு

கல்வியங்காட்டில், 3 படுக்கை அறைகள், கராச், மின்சார வசதியுள்ள வீடு, யாழ்ப்பாணத்திலிருந்து 3 மைல் — விபரங்களுக்கு 2, பவுண்டன்ஹவுஸ்லேன், மருதானை. (2, Fountain House Lane, Maradana) 1635

---


# இலங்கையில் பலகோடி பெறுமதியான வெட்டு மரம் ஆண்டுதோறும் அழிக்கப்படுகின்றன

## இல்லங்களிலும் பண்ணைகளிலும் மரங்கள் பீடைகளின் தாக்குதலுக்கு இலக்காகின்றன

நம்நாட்டிலே இன்று, கறையான், மரவண்டு ஆதிய பீடைகளினால் மரங்கள், வெட்டிய துண்டு மரங்கள், மற்றும் பதப்படுத்தப்பட்ட மரத்தினலான பொருட்கள் ஆதியன அபாயகரமான பெரும் சேதத்துக்கு உள்ளாகின்றன. மரப்பொருட்கள் இன்று தயாக்க்கப்பட்டு விற்பனையாகும் நிலைமைகளினலும், அவற்றின் பாவனை நிலைமைகளினலும், இப் பீடைகளின் தாக்குதலுக்கு பெரிதும் உட்படுகின்றன. உஷ்ண பிரதேசங்களில் மரத்தை உக்கவைத்துச் சேதம் விளைவிக்கும் பீடையாகிய காளான். பெரும் சத்துராதியாகின்றது. இன்று இறக்குமதியாகும் மரப்பாதுகாப்பு மருந்துகள் யாவும் பெரும்பாலும் சக்திவாய்ந்த காளான் நாசினிகளாகவும், ஆனால் வலுக்குறைந்த கிருமிநாசினிகளாகவுமே விளங்குகின்றன. கறையான், மரவண்டு ஆதிய பீடைகளின் நாசகாரியத்தை கட்டுப்படுத்த இத்தயாரிப்புகள் போதுமானவையல்ல.

ஆயின், ஷெல் மரப்பாதுகாப்பு மருந்துகள் இப்பீடைகளைஅறவே கட்டுப்படுத்தும் நோக்குடன், விசேடமான முறையில் தயாரிக்கப்படும் மிகச்சக்தி வாய்ந்த நாசினிகளாகத்திகழ்கின்றன.

**பீடைகளின் தாக்குதல்.**

இலங்கையிலே, பொதுவாக மரத்தைத் தாக்கும்பீடை கறையான் ஆகின்றது. இதை நாம் இலகுவில் கண்டுபிடிக்க முடிவதில்லை. ஆகவே, உத்திரம் போன்ற தடித்த குறை மரங்களைத்தானும் துரிதமாகத் தாக்கி வெளிப்பார்வைக்கு நல்லதாகத் தோற்றும் கோதுமரத்தை மட்டுமே விட்டுவைக்கின்றது. ஷெல் மரப்பாதுகாப்பு மருந்துகளில் கலந்துள்ள டீல்றின் எனும் கிருமிநாசினி கறையானை அறவே அழித்துக்கட்டுகின்றது.

**மரம் உக்குதல்**

பெரும்பாலும் மறைவாக உள்ள இடங்களிலேயே மரம் உக்குகின்றது. இதை கண்டுபிடித்து அகற்றுமுன் விரிவான சேதம் ஏற்பட்டு விடுகின்றது உத்திரம், தராய் போன்ற கூரை மரங்கள் உக்கி உழுத்து எச்சரிக்கையின்றி விழுந்து போகக் கூடும். ஷெல் மரப்பாதுகாப்பு மருந்துகளில் கலந்துள்ள பென்டாகுளோரோபினல் எனும் மருந்து இவ்வித சேதத்தை தடுக்கின்றது.

**மரப்பாது காப்பு மருந்து "ஏ"**

இம் மருந்து கறை ஏற்படுத்தாதது. சகல மரங்களுக்கும் வெட்டித் தயாரிக்கப்பட்ட மரத்துண்டுகளுக்கும் இதைப் பூசலாம். பின்னர் வர்ணம் பூசவிருக்கும் மரங்களில் பாவிப்பதற்கு இது மிகவும் சிறந்தது.

**மரப்பாது காப்பு மருந்து "பி"**

இம் மருந்து கடும் ஊதா நிறமுள்ள கறையை ஏற்படுத்துகின்றது. கட்டிட வேலைகளுக்குரிய மரங்கள், வேலிக் கம்பங்கள், தந்திக் கம்பங்கள் போன்ற மரங்களுக்கும் மற்றும் பண்ணைகள், தோட்டங்கள் இல்லங்கள், யாவற்றிலும் கறையை விரும்பப்படும் சகல மரங்களிலும் பாவிக்கலாம்.




மரத்தை மருந்தில் நன்கு ஊற விட்டோ, அல்லது நன்கு செறிந்து நிற்கும் படி ஒரு பிரஷ் கொண்டு பூசியோ இவ்விரண்டு மருந்துகளையும் பாவிக்கலாம். ஷெல் மரப்பாதுகாப்பு மருந்துகள் 1 கலன், மற்றும் 4 கலன் டின்களிலும் 45 கலன் பெரிய பீப்பாய்களிலும் கிடைக்கப்பெறுகின்றன.

இலங்கையில் எல்லா இடங்களிலும் கிடைக்கும்

ஷெல் இரசாயனப் பொருட்கள் SHELL


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துறவி மனத்தில் பிறந்த புரட்சிக் காவியம்

தமிழ் மிகப் பழமை வாய்ந்தது. நீண்ட காலம் அதன்பழமை பேசி தலைகிறுகிறுத்துவிட்டது. வாழ்க்கையில் மீளமுடியாத தொல்லைகளிலிருந்து நீந்த முடியாத ஒரு நேரத்தில் நமது இரத்தம் கோழைகளினதும் மூடர்களினதும் வழிவந்ததல்ல, பல செயற்கரிய காரியங்களைச் செய்த மக்கள் பரம்பரையினது என்று எண்ணி, கண்ணும் கருத்தும் முன்னேற வேண்டும். நாம்கம்பன், செங்குட்டுவன், வள்ளுவன் பரம்பரை என்று எண்ணும்போது துடித்து, மேலே சிறப்பான செயல் ஆற்ற வழி காணுகிறோம். இந்த அளவில் பழமையை நினைப்பது நல்லது. சிலப்பதிகாரத்தைப் பற்றிச் சிந்திப்பது சிறப்பு வாய்ந்தது.

தமிழில் முதல்எழுந்தகாப்பியம் என்னும் பெருமையினைச் சிலப்பதிகாரம் உடையது. இராமாயணம் இராமவீரனைப்பற்றியது. இதனைப் போல் பிறமொழிக் காவியங்களும் வீரர்புகழ் பாடுவதாம். சிலம்பு கோவலனைப் பற்றிப்பாடவில்லை. அவன்நடுப்பகுதியில்இறந்து விடுகிறான். ஆனால் காவேரியின் அணையைக்கட்டியகரிகாலனையோ, அநீதிக்காக உயிரையே விடத் துணிந்த பாண்டியன் நெடுஞ்செழியனையோ, கண்ணகிக் கோயிலுக்குக் கல்லெடுக்க இமயம் வென்ற சேரன் செங்குட்டுவனையோ அவர்தம் வீரத்தையோ பாடாது பெண்ணாகிய கண்ணகியைப் பற்றி இளங்கோ பாடுகின்றார்.

பிரிவுபட்டுநிற்கும் சேர, சோழ, பாண்டியரைப் பாடாது தமிழரின் வாழ்வில் காணக்கூடிய தமிழ்ப் பண்பாட்டைப் பாடவே சிலம்பினைப் பாடுகின்றார்.

இன்றைய ஜனநாயகப் பண்பாகிய சமத்துவத்தை,

''ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமானமாய்
வாழ்வம் இந்த நாட்டிலே''

என்னும் பாரதியின் சமத்துவத்தை சகோதரத்துவத்தைப்பாடுவதற்கு அரசனைப் பாடாது, குடிமக்களின் கதையையே எடுத்துக் கொண்டார்.

உலகமெங்கும் காணாத காட்சியை எங்கள் தமிழ் இலக்கியத்தில் காணலாம். அரசர்களைப்பற்றிய காப்பியங்களை பிற நாடுகளில் காணலாம். ஆனால் குடிமக்களைப்பற்றிய காப்பியங்களை தமிழ்நாட்டில் மட்டுமே காணலாம்.

சிலப்பதிகாரம் எழுவதற்கு தமிழ்நாட்டுச் சூழல் முக்கிய காரணமாய் அமைந்தது. திரைகடலோடி நிறையச் செல்வம் பெற்றிருந்தது ஒரு குறைபாடாகிவிட்டது. இதனால் வாழ்வு சிறந்தது— மக்கள் கொழுத்தனர் — தலை கிறுகிறுத்தது. எல்லா விதமாகவும் மக்கள் இன்பம் அனுபவித்தனர். மறுபுறம் துறவுக் கூட்டமும் வளர்ந்தது.

சங்ககாலத்தை எண்ணும் போது இன்பம் பொங்குகிறது. அவர்தம் காதல் தெய்வீகமானது. மறுபுறம்பொது மகளிர் வாழ்வும் நிலைத்தது. செல்வம் சிறந்த ஒரு நாட்டில்இந்தக் குழப்ப நிலை உண்டு. முத்தமிழ் ஒரு பக்கமும், கற்பு ஒருபுறமும் இருந்தது. கலையைப் பெண்ணாக வருணிப்பது பொது வழக்கு. கலை பெண்களால் வளருகிறது என உணர்ந்திருந்தனர். இயற்கையில் பொதுவுடைமை வளரும் இடம் கலையாகும். பிறர் முகம் மலர தம் உள்ளம் மலரும் தத்துவம் கலைக்கு உண்டு. கலையைக் கலைஞர் தம்முள் பூட்டிவைக்க முடியாது.

பலர் காணக் கலையை வளர்த்தவர் பொது மகளிராவர். இதற்கு மருதத் திணை உண்டு. ஏனைய மாதர் மணம் புரிந்து கற்புடன் திகழ்ந்தனர். வள்ளுவரைப் போலவே இளங்கோவும் பொதுமகளிர் வாழ்வை ஒப்புக்கொள்ளவில்லையானாலும் இளங்கோ உபதேசம் பண்ணவில்லை.

அழகனும் அறிவாளியுமான கோவலன், காதலினாலேயே கண்ணகியைக் கைப்பிடித்தான் அவன் கலையில் ஈடுபாடு கொண்டவன். இசைவாணன்; நடனத்தை இரசிக்கக் கூடியவன்.

கண்ணகியோடு கோவலன் வாழ்தலால் குடும்பக்கடமை கற்பின் திறன் நன்கு அங்கு தெரிகிறது. ஆனால் அவனின் கலைப்பசியைத் தீர்க்க கண்ணகியால் முடியவில்லை. இது அக்கால சமுதாயத்தின் பெருமை. பெண் சமுதாயத்தை வெட்டி வைத்த தமிழ் சமுதாயம் கலைக்கும் ஒழுக்கத்திற்கும் இடையில் ஓர் இடர்ப்பாட்டை உண்டாக்கியது.

மாதவி. ஒருசிறந்த நடன மாது. அவள் கலையின் அரசி. அவளே 'நெடுங்கண் மாதவி' என்று கூறும் அளவுக்கு, அவளின் கலைக்கு அடிமையாகி, தனது புகழையும் கண்ணகியையும் மறந்துவிடுகிறான் கோவலன்.

மாதவி கலையரசிமட்டுமன்றி அவள் ஒரு கற்பரசி என்பதையும் இளங்கோ காட்டுகின்றார். கோவலனை விட வேறு தெய்வம் இல்லை என்ற நிலையில் அவள் வாழ்கின்றாள், இமயத்திற்கும், கங்கை-யமுனைக்கும், விந்தியத்திற்கும் அடுத்த நான்காவது நிலையில் மாதவியின் ஆடல்அமையும் அளவுக்குச் சிறந்து விளங்குகிறாள்.

மாதவியை மக்கள் அனைவரும் கண்ணாரக்கண்டு போகின்ற நிலையில், மாதவி ஒரு பொதுமகள்தானே என்ற எண்ணம் கோவலனிடம் விரிடுகின்றது; நெஞ்சம் உடைகின்றது அந்த நிலையில் யாழிலே இசை மீட்டி ''காவேரியே நீதான் கற்பு நிறைந்தவள். உனது அகமுடையான் சோழன், பாண்டிநாட்டு கன்னியா குமரியையும், வடக்கே கங்கையையும் கொண்டாலும், நீ முகம் வாடாதிருப்பதல்லவா கற்பு'' என்று பாடி, காவேரியிலே கண்ணகியைக் காணுகின்றான். கண்ணகி மீதிலான அடிமன எண்ணம் அங்கு விரிடுகின்றது. உடுக்கமாகவே பாடுகின்றான்.

கோவலனின் உண்மை உள்ளத்தை நோக்குவதற்காக பிற ஆடவனொருவனிடம் தனக்கும் அன்பு உண்டு என்ற பாவனையில் அவளும் யாழை மீட்டி ''காவேரியே நீ அழகாய் ஓடுகின்றாய். ஆனால் உனது வளம், கிறுக்கு, மிடுக்கு, நடை எல்லாம் உன்கணவன் சோழன் ஒழுக்கமும், மனுநீதியும் தவறாதிருக்கும் பெருமையாலல்லவா'' என்றுபாடுகிறாள்.

இந்த நிலையில் நீண்டு வளரும் மனக்கசப்பில், மாதவியை விட்டுக் கோவலன் பிரிகிறான். கண்ணகியை அடைந்து, சோழநாட்டை விட்டுச் செல்லமீட்ட சிலம்பு விற்க பாண்டிநாடு செல்கின்றனர்.

இடையிலே கவுந்தியின் பாத்திரப்படைப்பு,ஒழுக்கத்தைக் காட்ட அமைந்ததாம். கவுந்தியே கண்ணகியை கற்பின் தெய்வமாகக் கொள்கின்றாள் சிறுவனின் வாயிலாக கோவலனைப் பிரிந்த அன்றைய கோலத்திலேயே மாதவி இன்னமும் காட்சியளிக்கின்றாள் என்பதைஅறிந்தகோவலன் அவளின் மேலானஒழுக்கத்தை உணர்கிறான்.

கோவலன் ஒரு கலாரசிகன் என்பதை மீண்டும் பல இடங்களில் இளங்கோ காட்டுகின்றார். பிராமணருடன் சேர்ந்து அவனும் இசை பாடுகின்றான். பாண்டி நாட்டின் கலையிலும் அவன் ஈடுபடுகின்றான். மதயானையை அடக்கி வீரனாகக் காட்சி தரும் கோவலன், அதனைக் கொல்லாது ஜைன நெறியில் நின்றும் வழுவாது, ஒழுகுகின்றான். பாவிகளையும் உயிரைக்கொடுத்துக் காப்பாற்றும்துடிதுடிப்பை அவனிடம் காணமுடிகிறது. வடமொழியிலும் வல்லவனாகக் காணப்பட்டான்.

சோழநாட்டில் காணப்பட்ட அதே சமுதாயப்பிரிவினையை பாண்டிநாட்டிலும்

(2-ம் பக்கம் பார்க்க)

## மார்கழிப் பாவை!

— சபா. ஜெயராசா —

வரண்ட நிலங் குளிர
வானமுதந் தான் பொழிய
திரண்டு மழைத் திங்கள்
சீராகி முற் றுடர
புரண்டுமத கோடும்
புதுவெள்ளந் தான் சுழிப்ப
அரண்டு துயி லெழுவாள்
அம்மாது! மார்கழிப் பெண்!

வண்டில் குளை யேந்தி
வாகான தெரு வோட
'கண்டு' நடுதற்குக்
கமக்காரன் தான் முனைந்து
'நிண்டு' கடனேந்தி
நிலன் நோக்கித்தான்செல்ல
கண்டு மழை யுதிர்ப்பாய்!
களிநங்கை! மார்கழியே!

வேலி முகஞ் சிலிர்ப்ப
வெண்ணீர்க் கரை சிலிர்ப்ப
காலைக் குளிர் சிலிர்ப்ப
கண்ணூர் முகஞ் சிலிர்ப்ப
கோலம் பல வெழுதிக்
கொண்டாட முற்ற மதில்
காலம் முதிர் சொல்வாள்!
கசிந்திடுவாள்! மார்கழிப்
பெண்

# இலங்கை வானொலி வளர்ந்த கதை

## 1926 - 1965

இலங்கை வானொலி நிலைய ஒலிபரப்பு நிகழ்ச்சிகளை வகுத்தமைக்க 1932-ம் ஆண்டில் தந்திக் கந்தோர் பிரதம எஞ்ஜினியரின் தலைமையில் ஓர் ஆலோசனைச் சபை நியமனமாயிற்று. காலஞ்சென்ற முதலியார் திரு. செ. இராசநாயகம் அவர்கள் தமிழ் இரசிகர்களின் பிரதிநிதியாக அச்சபையில் நியமனம் பெற்றார். அக்காலத்தில் இராசநாயக முதலியார் அவர்களின் சிஷ்யனாக இலங்கைச் சரித்திர ஆராய்ச்சியிலும், வானொலி நிலையக் கலைவளர்ச்சியிலும் எனக்கு ஈடுபாடு உண்டாயது. அஃது இன்றுவரை தளர்ச்சியடையவில்லை.

இன்று வீட்டுக்கு வீடு வானொலிப்பெட்டி அருகே சிறுவர் சிறுமியரும், ஆண்களும் பெண்களும், கூடியிருந்து காலை முதல் மாலை வரை பல்வேறு நிகழ்ச்சிகளைக்கேட்டு இன்புறுகின்றனர். இங்ஙனம் நீங்கள் இன்புறுவது எதன் பயன்? நாற்பது வருடங்களின் முன் நம் தபாற் தந்திச் சேவைப் பகுதியினருக்காகவீடு வீடாகச்சென்று இசைத்தட்டுகள் சேகரித்து என் இல்லத்தில் வைத்தேன். அவற்றை வானொலி நிலையத்தார் மோட்டார் வண்டியில் எடுத்துச் சென்று நேயர் விருப்ப நிகழ்ச்சித்தொகுப்பு என ஒலிபரப்பினர். இது வெறுங்கதையன்று. உண்மையான நிகழ்ச்சியே. அக்காலத்தில் இசைத் தட்டுகளைச்சேகரிப்பதும் ஒலிபரப்பின் பின் அவற்றைத் திருப்பிச் சொந்தக்காரரிடம் சேர்த்தலும் என்பொறுப்பு. இதனையும், நிகழ்ச்சி நிரல் தயாரித்தல் முதலிய பணிகளையும் காலஞ்சென்ற முதலியார் இராசநாயகம்அவர்களுக்காக நான் செய்துவந்தேன். அன்று நான் உருவாக்கிய 'நேயர் விருப்ப நிகழ்ச்சி நின்றுவிடாமல்இன்றும் நடைபெற்றுவருகிறது.

இலங்கை வானொலி நிலையத்தில் தமிழ் நிகழ்ச்சிகளை ஆரம்பத்தில் உதவியும், அறிவித்தும் வந்தவர் தபால் தந்திக் கந்தோர் உத்தியோகத்தர் திரு. கே. விநாயகமூர்த்தி என்பவராவர். அவர் ஊர்காவற்றுறை வாசி. பல காலம் இத்தொண்டினைச் செய்தபின் அவரின் சொந்த வேலைக்குத் திரும்பவும்மாற்றப்பட்டார். அவர் இன்றும் ஓய்வுபெற்றுஉயிரோடுஇருக்கின்றார். அவரின் பின்னரே நிரந்தரதமிழ்அறிவிப்பாளர் ஒருவர் நிலையத்தில் நியமிக்கப்பட்டார்.

இந்த அத்திவாரத்தின் பின்னர் தோன்றியது ஓர் அஞ்சல் காலம். இதனை அதிகாரி காலம் என்றும் சொல்வார்கள். நாளொன்றுக்கு ஒன்றரைமணி நேரம் தமிழ் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டன. மதராஸ் நிலையம் 1938-ம் ஆண்டிலும், திருச்சி நிலையம் 1939-ம் ஆண்டிலும் நிறுவப்பட்டன. எங்கள் அதிகாரி, நிகழ்ச்சி நிரல்களை நிரப்பமுடியாது போனால் தென்னிந்திய அஞ்சல்களைக்கொண்டு நிரப்பிவிடுவார். ஒரு பட்சத்திற்கு ஆறு அஞ்சல்களுக்குக்குறைவிருக்கா. மதராஸ், திருச்சி, மைசூர் ஒவ்வொன்றிலிருந்தும் இவ்விரண்டு அஞ்சல் தாரும் என்றால் தரமாட்டார். அவ் அஞ்சல்களில் மதராஸ், திருச்சி நிலைய நிகழ்ச்சிகளில் முழுமையும் வரா. ஒரு நிகழ்ச்சியின் முடிவையும் மற்றதன் தொடக்கத்தையும் அவர் தருவார். இதனால் எல்லாம் இந்த அதிகாரியும்நானும் மாதந்தோறும் முட்டினோம்.

இந்நிலையில், நல்ல முறையில் இலங்கை வானொலி நிகழ்ச்சிகளை இந்நாட்டு மக்களுக்கு உதவ விரும்பிய அரசாங்கம், காலஞ்சென்ற சேர். கந்தையா வைத்தியநாதன் தலைமையில்ஒரு விசாரணைச்சபையை நியமித்தது. 1941-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3-ந் தேதியன்று இச்சபையார் முன் நானும் சாட்சியமளித்தேன். இவ்விசாரணைக் குழுவின் சிபார்சுப்படி நிகழ்ச்சிகள் சீர்திருத்தி அமைக்கப் பெற்று, ஒலிபரப்புச்சேவை சுவையாக அமைந்துவரும் நாளில், கொடிய யுத்தகாலம் வந்தது.

— வட்டுக்கோட்டை மு. இராமலிங்கம் —

நிகழ்ச்சிகளில் மாறுதல் ஏற்பட்டதுமல்லாமல், இலங்கை வானொலி நிலையமும் அதன் சொந்த இடத்தை விட்டுப் பொறளையிலுள்ள ஒரு வாடகை வீட்டுக்குத் தற்காலிகமாக மாற்றப்பட்டது. இந்த வீட்டிலுள்ள இரு அறைகளையே நிகழ்ச்சிகள் ஒலிபரப்பும் வானொலிக் கூடங்களாக அமைத்து, சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டன. மத்திய அலையிலும்சிற்றலையிலும் ஒரே டிரான்ஸ் [illegible] மும்மொழிகளிலும் அது அதற்கெனப் பிரத்தியேகமாகஒதுக்கப்பட்ட நேரங்களில்நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகிவந்தன.

இயல், இசை, நாடகத் துறைகளில் சிறந்த அறிஞர்களுக்கு ஒலிபரப்பு வசதிகள் தரப்பட்டன. சிறுவர்க்கேற்ற நிகழ்ச்சிகள், சமய போதனை, யுத்தகால அறிவுரைகள், செய்திகள், ஒலிச்சித்திரங்கள் ஆகிய பலசுவையான நிகழ்ச்சிகள், இக்காலத்தில்தான் முதன்முதல் இடம்பெற்றன. தபால்தந்திப் பகுதிகளின் தலைவரின் அதிகாரத்தில்இயங்கிய இந்நிலையம் ஒலிபரப்புச் சேவையில் ஓர்உச்ச நிலையைஎய்தியிருந்தது என்றும் சொல்லலாம்.

நிகழ்ச்சிகள் சிறப்பாக அமைந்ததின் பயனாக நாட்டின் நாலு பக்கங்களிலும் வானொலிக்கருவிகள் பரவலாயின. வாரந்தோறும் ஒவ்வொரு புதன்கிழமை மாலையும் கிராம நிகழ்ச்சி ஒன்றைக் கொழும்பு வானொலி நிலையம் ஒலிபரப்பி வந்தது. கிராம மக்கள் கூட்டுறவு முறையிலும், சனசமூக நிலையங்கள் மூலமும் நிகழ்ச்சிகளைக் கேட்க முன்வந்தனர்.

இடைக்காலத்தில் இலங்கையில் ஒலிபரப்புச் சேவை இவ்வாறாக ஓங்கி வளர்ந்ததற்கு ஒரு காரணம் நம் நாட்டுப் பத்திரிகைகளே என்பது மிகையாகாது. தினசரிகளும், வார இதழ்களும் வானொலி நிகழ்ச்சிகளை வெளியிட்டதுடன் 'ரேடியோ விமர்சனம்' என்னும் பகுதியை வகுத்து, நிகழ்ச்சிகளின் தரத்தை அவ்வப்போதுவிமரிசனம்செய்து ஊக்கப்படுத்தின. அவற்றைப்படித்த இரசிகர்களும் நிகழ்ச்சிகளைப் போற்றியும் தூற்றியும் நிலைய அதிகாரிகளுக்கு எழுதினர். உண்மையான விமர்சனங்களை நிலையத்தார் ஏற்றுத் திருத்தஞ்செய்தனர்.

1949-ம் ஆண்டு மே மாதம் முதலாந்தேதியன்று ஒலிபரப்பப்பட்ட ''களவுக் காதலர் கையாண்ட விடுகதைகள்'' என்னும் எனது நாட்டார் பாடற் சொற்பொழிவைக் கேட்டு இன்புற்ற, இளைப்பாறிய மைசூர் மாவட்ட நீதிபதி திரு. ஏ. எஸ். ஆர். சாரி, தாமாகவே அதனைப் பாராட்டி இலங்கை வானொலி நிகழ்ச்சி அதிகாரிக்கு எழுதிய கடிதம் ஒன்றின் பிரதி அதிகாரியால் எனக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இங்ஙனம் வானொலி நிலையத்தினர், நிகழ்ச்சி கொடுப்பவர், இரசிகர் என்னும் முப்பகுதிக்கும் அன்னியோன்னிய உறவு இருந்தமை ஒலிபரப்புக்கலையின் வளர்ச்சிக்கு ஏதுவாயது.

அருங்கலைகள் அனைத்திற்கும் பெருந்தொண்டு புரிந்து வந்த காலஞ்சென்ற திரு. கே. கனகரத்தினம் தமது சலியா உழைப்பினால் அக்காலத்தில் தபால் தந்திப் பகுதி மந்திரியாராயிருந்த காலஞ்சென்ற திரு. ஸி. சிற்றம்பலத்தின்உதவிகொண்டு ஒலிபரப்புச் சேவையை மேலும் விருத்தி படுத்த முன்வந்தார்.

ஆலோசனைக் குழுவிற்குத் தலைமையாயிருந்தவர் திரு. கே. கனகரத்தினம் அவர்களே. ஆலோசனைக்குழுவுடன் நிலையத்தலைவரும் அறிவிப்பாளரும் ஒத்துழைத்தனர். அதனால் இலங்கை

(4ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம்விசுவாவசுஆண்டு மார். மீ11உ(26-12-65)

## ஜனநாயகத்தைப் பாதுகாக்க

உலகில் ஜனநாயக தர்மத்தைக் காக்க ஆத்மீக சக்திகளைப் பலப்படுத்த வேண்டும் என்றும், சுதந்திரத்தையும் மனிதகௌரவத்தையும் பாதுகாக்க உண்மையான ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டியதென்றாலும், ஆத்மீகத்தை வளர்க்காமல் பொருளாதார ராணுவ ஸ்தாபனங்களை வளர்ப்பதால் மட்டும் எவ்விதபயனுமில்லை என்றும் இந்தியா, இலங்கை, பர்மா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கான ஆங்கிலிக்கன் திருச்சபை அத்யட்சாதீனக்குரு அதி வண. லக்தாஸா டி மெல் தமது கிறிஸ்மஸ் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். அவரின் இச்செய்தி மக்கள், குறிப்பாக இலங்கை மக்களின் சிந்தனையைத் தூண்டுவதாக இருக்கவேண்டும்.

இலங்கையில் இன்று சுதந்திரம் பற்றியும், ஜனநாயகம் பற்றியும் அதிகம் பேசப்படுகிறது. அரசியல் சுதந்திரம், மதசுதந்திரம் என்றெல்லாம் பேசப்படுகிறது. இதற்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு விளக்கம் கொடுக்கின்றனர். ஜனநாயகம் என்றால் பெரும்பான்மையினரின் ஆட்சி. எனவே இந்நாட்டின் பெரும்பான்மைச் சமூகத்துக்குத்தான் சகல உரிமைகளும் இருக்கவேண்டுமென்பது இங்குள்ள தலைவர்கள் பலரது முடிவு. பெரும்பான்மையினரின் மொழி, உத்தியோக மொழியாக இருக்கவேண்டுமென்பது அவர்களது தீர்மானம். அதன்படி உத்தியோகமொழிச்சட்டமும் நிறைவேற்றப்பட்டுவிட்டது. பெரும்பான்மையினரின் மதம் தான் இந்நாட்டின் அரசாங்க மதமாக இருக்க வேண்டுமென்பதிலும் பெரும்பான்மைச் சமூகத்தலைவர்களுக்கிடையில் வேறுபாடில்லை. அவர்களில் யார் இதை முதலில் பிரகடனப்படுத்துவது என்பதில்தான் வேறுபாடு. பெரும்பான்மையினரின் மத சுதந்திரத்தையும் மொழி உரிமையையும் மற்றும் சகலஉரிமைகளையும்பாதுகாக்கவேண்டுமென்பதுதான் அவர்களது ஒரே நோக்கம். பெரும்பான்மைச்சமூகத்தின் உரிமைகளைப் பாதுகாப்பதில் எவரும் ஆட்சேபம் தெரிவிக்கவில்லையெனினும், சிறுபான்மையினர் தங்கள் உரிமையைப்பெறுவதற்கும் பாதுகாப்பதற்கும்கூட பெரும்பான்மைச்சமூகத்தலைவர்கள் விரும்பவில்லை, தடையாகவும் இருக்கிறார்கள். ஜனநாயகத்தைக் காப்பாற்ற வேண்டுமென்றால் பெரும்பான்மைச் சமூகத்தைத்தான் பாதுகாக்கவேண்டுமென்று அவர்கள் கருதுகிறார்கள்போலும்.

சுதந்திரம் என்பது, ஒருபிரிவினர் சுதந்திரமாக வாழ்வதும், மற்றொருபிரிவினர் சுதந்திரத்தை இழந்து துன்பப்படுவதும் அல்ல. ''இந்நாளையிலே அரசியல் சுதந்திரம் பெற்றுள்ள மக்கள் பூரண சுதந்திரராதல் அவசியமன்று என்பதையும், வலிமையுற்றவர்களாக மட்டுமே உள்ளனர் என்பதையும் நாம் ஒருபோதும் மறக்கக்கூடாது. சுதந்திர நாடுகள் என்று சொல்லிக்கொள்ளும் நாடுகளில், மக்களில் பெரும்பான்மையோர் சுதந்திரம் அற்றவர்களாகின்றனர். அவர்களுக்கு இன்னதென்று தெரியாத ஒரு குறியை நோக்கிச் செலுத்தப்படுகின்றனர். இது சாத்தியமாவதற்குக் காரணம் யாதெனில், மக்கள் அறத்துறையிலும், ஞானத்துறையிலும் சுதந்திரத்தைத் தமது நோக்கமாகக் கொள்ளாமையொன்றே. அவர்கள் தம் கோபதாபங்களால் பெருஞ்சுழிகளைப் படைத்து விடுகின்றனர். தமது சுழற்சியின் வேக மாத்திரத்தாலே தலைசுற்றுமளவுக்கு வெறிகொள்பவராகின்றனர். அதனையே சுதந்திரமென உணர்கின்றனர். அவர்களை எட்டிப்பிடிக்கக்காத்திருக்கும் விதியோ சாவைப்போன்று உறுதியானது. ஏனெனில், மனிதனைப் பற்றிய உண்மை அறஉண்மையே. அவனது விடுதலை ஞான வாழ்க்கையிலே தான்'' என்று கவிஞரும் தத்துவஞானியுமான ரவீந்திரநாத்தாகூர் கூறியிருப்பதும், இன்று வண. டி. மெல் ஜனநாயக சுதந்திரத்தைப் பாதுகாக்க ஆத்மீகத்தை வளர்க்கவேண்டிய அவசியத்தை வலியுறுத்தியிருப்பதும், சுதந்திரமென்பதற்கு பலரும் பலவிதமாக விளக்கம் கொடுக்கும் இலங்கை மக்களின் சிந்தனைக்கு வழிகாட்டுவதாயிருக்கவேண்டும்.

இலங்கை சுதந்திரமடைந்து பதினெட்டு ஆண்டுகளாகியும், இங்கு வாழும் மக்கள் அனைவரும் சந்தோஷமாகவும், சமாதானமாகவும், சுபீட்சமாகவும் வாழ்கின்றனரா? சமூகங்களுக்கிடையில் போட்டியும், பூசலும், பிளவும், பிரிவினையும் தான் அதிகரித்துள்ளன.

ஆத்மீகத்தை வளர்த்தாலே உலகில் ஜனநாயக தர்மத்தைக் காப்பாற்றமுடியும் என்பதற்கு சிலர் தவறாக விளக்கம்கொண்டிருப்பதால்தான், பெரும்பான்மைச் சமூகத்தின் மதமே நாட்டின் அரசாங்க மதமாக இருக்கவேண்டுமென்றும், அதன் மூலமே ஆத்மீகத்தைவளர்த்துஜனநாயகத்தைக் காப்பாற்றமுடியுமெனவும்கருதுகின்றனர்போலும். சட்டமூலம் சமயம்பற்றிய மதிப்புக்களை ஒப்புக்கொள்ளுதல் போதியதாகாது. இப்பிரச்னையை மெய்யாகத் தீர்க்கவேண்டின் ஒவ்வொரு தனிமனிதனும் அதற்கு முடிவாக விடையிறுக்கவேண்டும். ''நேர்மையான மனச்சான்றின்கட்டளைகளினங்க, கடவுளுக்கு மதிப்பளிக்கும் உரிமையும், தனது சமயத்திற் கொள்ளும் நம்பிக்கையை அந்தரங்கமாகவும் பகிரங்கமாகவும் வற்புறுத்திப்பேசும் உரிமையும் ஒவ்வொரு மனிதனுக்கும் உள்ளது'' என்று இருபத்திமூன்றாவது அருளப்ப பாப்பரசர் கூறியதுபோல், ஒவ்வொரு மனிதனுக்கும் மதசுதந்திரம் இருந்தால்தான் ஆத்மீகம் வளர்ச்சிபெற்று ஜனநாயகத்தைப் பாதுகாக்கமுடியும்.

# மாற்றம்

[இது ஒரு பழைய கதை. ஆனாலும் காலம் கடந்த சிரஞ்சீவித்வம் பெற்றது. நத்தார் காலத்தில் அது மறுபடியும் நினைவுக்கு வருகிறது.]

ஒப்புயர்வில்லாத ஓவியக் கலைஞன் ஒருவன் இருந்தான். அவனுக்கு யேசு கிறிஸ்துநாதரின் வரலாற்றில் 'வரும் கடைசி விருந்தை' அழியா ஓவியமாக்க வேண்டுமென்று ஆசை பிறந்தது. அகத்தின் அழகு முகத்தில் தெரியுமல்லவா? யேசுவின் கருணை, சாந்தம், இரக்கம் எல்லாம் பொருந்தியுள்ள ஒரு முகம் எங்கே கிடைக்கும் என்று தேடி அலைந்தான். ஊர்ஊராகச் சுற்றினான். இறைவனுடைய படைப்பில் அவ்வளவு லட்சணங்களும் கூடிய ஒரு முகம் கிடைக்காமலா போய்விடும்? இறைவனுடைய புதல்வன் வதனத்தில் திகழ்ந்த 'கோதிலா நிறைவு' கிடைப்பது அரிது. ஆயினும் ஏறக்குறைய அதற்கொப்பான ஒரு முகத்தைத்தேடினான்.

எங்கோ ஒரு மூலைக் கிராமத்தில் இப்பேர்க்கொத்த முகம் ஒன்று கிடைத்தது. பத்து, பன்னிரண்டு வயதுள்ள ஒரு சிறுவன். சாக்கடையில் விளையாடிக் கொண்டிருந்தான். அவனுடைய முகத்தில் அந்த ஜோதியின் சாயல் படிந்திருந்தது. அவனுக்கு வேண்டிய தீன் பண்டங்களை வாங்கிக் கொடுத்து தான் படம் வரைவதற்கு அவனைச் சம்மதிக்கச் செய்தான். பால் வடியும் அந்த முகாரவிந்தத்தில் தான் உருவகித்துக் கொண்ட லட்சணங்கள் பொருந்தியிருப்பதைக் கண்டு ஓவியன் அகமகிழ்ந்தான். கரவும் சூதும் அறியாத அந்தப் பார்வையில் யேசுவின் பரிசுத்தம் பொலிவதைக்கண்டு வியந்தான்.

தூரிகை திரையைத் தடவியது. ஓவியன் கற்பனையில் கண்ட முகம் அதில் பதிந்தது. 'கடைசி விருந்தில்' யேசுவின்படம் வரையப்பட்டது.

இனி, இதற்கு நேர்மாறான முகம் ஒன்றைத் தேடவேண்டும். யூதாஸின் முகம். மறுபடியும் ஊர்சுற்றக் கிளம்பி

— வி. என். பி. —

விட்டான் ஓவியன். மனிதனிடத்தில்காணப்படும் சகல விதமான துர்க்குணங்களும் அந்த முகத்தில் பிரதிபலிக்கவேண்டும். காட்டிக் கொடுத்த கயவனின் முகமல்லவா அது? வஞ்சகம், பொறாமை, மமதை, சூழ்ச்சி, இரண்டகம் எல்லாம் அதில் அமைந்திருக்க வேண்டும்.

வருடங்கள் பல சென்றன. ஓவியன் இன்னும் யூதாஸின் முகத்தைத்தேடி அலைந்து கொண்டிருந்தான். அவன் கிழவனாகி விட்டான். தான் கற்பனை செய்து கொண்ட அந்தக் கெட்ட முகத்தை அவன் சந்திக்கவில்லை. தேசாந்திரியாகச் சுற்றினான். ஏற்கனவே போன இடங்களுக்கு மீண்டும் போய் வந்தான். காலமும் திசையும் அவனுக்குத்தெரியவில்லை. எப்படியாவது அந்த கோரமான முகத்தைக் கண்டு பிடித்து அதை திரையில் பதித்துவிட வேண்டும் என்று நிச்சயம் செய்து கொண்டு பசியும், தாகமும், களைப்பும், அலுப்பும் இல்லாமல் தேடித்திரிந்தான்.

வெகு காலத்திற்குப்பின் அவனுடைய மனதுக்குப் பிடித்த ஒரு முகம் கிடைத்தது. அதன் சொந்தக்காரன் நாயினும் கடையவன். மனிதகுலத்தின் மண்டி. சமூதாயத்தால் வெறுத்து ஒதுக்கப்பட்டவன். அவனைக் கண்டவர்கள் காறித்துப்பினார்கள். எரிச்சல், பொறாமை, குரோதம் முதலிய எல்லாவிதமான பேய்க்குணங்களும் அவனுடைய முகத்தில் தோன்றின.

ஓவியன் அவனை அணுகி தன் விபரத்தைச் சொன்னான். அவனும் படம் வரைவதற்குச் சம்மதித்தான். ஓவியன் தனது லட்சியம் நிறைவேறுவதை நினைத்து ஆனந்தப்பட்டுக்கொண்டு படத்தை வரைந்தான்.

படம் முடியும் தறுவாயில் ஓவியனுக்கு ஒரு பெரும் அதிர்ச்சி ஏற்பட்டது. படத்துக்கு முகம் கொடுத்தவன் திடீரென்று விம்மி விம்மி அழத் தொடங்கிவிட்டான். அவனை ஆற்றமுடியாமலே போய்விட்டது.

கடைசியில் அவனை ஒருவாறு தேற்றி 'ஏனப்பா அழுதாய்?' என்று கேட்டான் ஓவியன். அவனுக்குக் கிடைத்த பதில் இதுதான்:

''பல வருடங்களுக்கு முன்பு யேசுகிறிஸ்து நாதரின் சாயல் வேண்டுமென்று விரும்பி ஒரு சிறுவனின் முகத்தை வரைந்தாயல்லவா? அவன் தான் நான். அந்த முகம் தான் இது!''

# இலங்கை வானொலி வளர்ந்த கதை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வானொலி நிகழ்ச்சிகள் பல படிகள் உயர்வடைந்தன. வெள்ளித்திரை அஞ்சல், தமிழ்நாடு புகழ்கின்ற திருவெம்பாவை அஞ்சல், நல்லூர்க்கந்தசுவாமி கோவில் அஞ்சல், பட்சத்திற்கொரு நாட்டார் பாடற் சொற்பொழிவு, தாய்நாட்டுக்கலைஞர்கள் பேட்டி முதலியன அக்குழுவின் காலத்தில் முதன் முதல் இடம்பெற்றன. அத்துடன் முஸ்லிம் பெண்மணிகளும் ஒலிபெருக்கியின் முன்வந்து நிகழ்ச்சிகளில் பங்குபற்றத் தொடங்கினர். இந்த நிகழ்ச்சிகள் இவை இவை என்று நான் பத்திரிகையில் ஓர் ஆசிரியப்பாவாக வெளியிட்டேன். அதன் ஒருபகுதியிது.

நாதஸ்வரமும் நாட்டார்
பாடலும்
நாளொரு பேச்சும்
நாடக நிகழ்ச்சியும்
புத்திமண்டலம்
புத்தக விமர்சனம்
கிராமநிகழ்ச்சி
கிறிஸ்தவ கீதம்
குர்ஆன்விளக்கம்
கூட்டுப்பிரார்த்தனை
நாட்டிலும் நகரிலும்
நங்கையர் பகுதி
கதாப்பிரசங்கம்
கல்விஒலிபரப்பு
கதம்பநிகழ்ச்சி
காதள்ளுவீணை
வயலின் வாத்தியம்
வாய்பாட்டுக் கச்சேரி
வாத்தியக்கோஷ்டி
தோத்திரப்பாடல்
வெள்ளித்திரையில்
நண்ணுமின்கானமும்
யாவரும்விரும்பும்
ரேடியோபோட்டியும்
புல்லாங்குழலும்
பெரியோர் மொழிகளும்
எல்லா இசைகளும்
இஸ்லாமிய கீதமும்
சிறுவர் நிகழ்ச்சியும்
செய்தியறிக்கையும்
முஸ்லிம் நிகழ்ச்சிகள்
முக்கிய அஞ்சல்கள்
இன்னோரன்ன
இயல் இசை நாடக
நிகழ்ச்சிகள்பலவுடன்
நேயர்விருப்பமும்

என்று அப்பாட்டு போயது. இந் நிகழ்ச்சிகளுள் சில இன்று கைவிடப்பட்டன. பல உண்டு. வேறு புதிய நிகழ்ச்சிகளும் பின்னர் தோன்றின.

இலங்கை வானொலி நிலையம் தற்காலிகமான வீடு மாறிப் புதுஇல்லாம் குடிபுகும் நல்லநாளும் வந்தது. வர்த்தக ஒலிபரப்புப்பகுதியும் ஜனனமாயிற்று. ஒலிபரப்புச்சேவை மேலும் விரிவடையவேண்டியிருந்ததால் இங்கிலாந்திலிருந்து அதிகாரி ஒருவரும், அவருக்கு உதவியாக பி. பி. ஸி. யிலிருந்து ஒருவரும், அவுஸ்திரேலியாவிலிருந்து வர்த்தக ஒலிபரப்புப்பிரத்தியேக அதிகாரி ஒருவரும் நம்நாட்டுக்கு அழைக்கப்பட்டனர்.

புதுமனை புகுதலும், பழையனமாறி சிங்களம், தமிழ், ஆங்கிலப் பகுதிகளுக்குத் தனித்தனி நிகழ்ச்சி தயாரிப்பாளர்களும் அவர்களுக்கு உதவியாக பேச்சு, நாடகம், இசை ஆகிய முப்பிரிவுகளுக்கும் ஒவ்வொரு தனித்தனி உத்தியோகத்தரும் நியமிக்கப்பட்டனர். ஒரே அலையில் மூன்று பாஷை நிகழ்ச்சிகளும் ஒன்றன் பின்னொன்றாய் வந்தகாலம் போய் தனித்தனி அலையில் ஒலிபரப்பும் காலமும் வந்தது.

நாளடைவில் முஸ்லிம் பகுதிக்கும் ஒரு தனி உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டார்.

இதுவரை வித்தியா பகுதியாருடன் இணைக்கப்பட்டிருந்த கல்வி ஒலிபரப்பு நிகழ்ச்சிக்கென ஒரு தனி அதிகாரியும் நியமிக்கப்பட்டார். கல்வி ஒலிபரப்பு நிகழ்ச்சிகள்சிங்களம், தமிழ், ஆங்கிலமாகிய மும்மொழிகளிலும் பாடசாலை நேரங்களில் உதவப்படுகின்றன.

இவ்வித்தியாபகுதி நிகழ்ச்சியில் நான் இட்டவித்தே பின்னர் வித்தியாபகுதியினர் பள்ளிப்பாடத் திட்டங்களில் நாட்டார் பாடல்களைப்புகுத்தி வளர்த்த மரமாயிற்று.

நாட்டார் பாடற் சொற்பொழிவுகள் நிகழ்த்தியதோடு நில்லாது, வானொலி நாடகங்கள் எழுதியும் நடித்தும் வந்தேன். நான் இயற்றிய ''வெற்றி யாருக்கு?'' என்னும் நாடகம் 1950-ம் ஆண்டு நவம்பர் மாதம் தீபாவளியன்று வானொலி மூலம் நடிக்கப்பட்டது. இது சம்பந்தமாக ஒரு செய்திஉண்டு இந்தநாடகம் உதவாதுஎன்று ஒரு தினசரி, அதன் ரேடியோ விமர்சனப் பகுதியில் எழுதியிருந்தது. அந்நாடகத்தினை மிகவும் பாராட்டி இலங்கைத் தமிழ்ப்பிரமுகர் பலரிடமிருந்து எனக்குக்கிடைத்த கடிதங்களை அப்பத்திரிகையின் தலைமைப் பீடத்திற்கு அனுப்பிவைத்தேன், மூன்றாம் நாள் அப்பத்திரிகையின் விமர்சனப்பகுதி ஆசிரியர் என் இல்லம் வந்து என்னிடம் சமாதானம் கூறி மேல்நடவடிக்கைகள் எடுக்க நான் விரும்பவில்லையென ஒரு கடிதமும் என்னிடமிருந்து பெற்றுச்சென்றார். வானொலிநிலைய அதிகாரிகள் மீதோ, கலைஞர்கள் மீதோ வஞ்சமோ, பட்சபாதமோ இல்லாத விமர்சனங்கள் என்றைக்கும் விரும்பத்தக்கன. அவை இருசாரார்க்கும் நன்மை பயப்பன.

இலங்கையில் ஒலிபரப்புச் சேவை ஓங்கி வளர்ந்ததன் பயனாக கொழும்புத் திட்டத்தின் கீழ் பல உத்தியோகத்தர் இங்கிலாந்து, கனடா, மலாயா, யப்பான், அவுஸ்திரேலியா முதலாம் நாடுகளில் விசேஷ பயிற்சி பெற்றுத்திரும்பினர்.

1953-ம் ஆண்டில் திரு. என். ஈ. வீரசூரியா தலைமையில் இரண்டாவது விசாரணைச்சபை மேலும் செய்ய

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகமேடை

## இந்திய உணவு நெருக்கடி

இந்தியாவின் உணவு நெருக்கடி சாதாரண உள்நாட்டுப் பிரச்னையாக இருந்து, தேசியப் பிரச்னையாக மாறி, கிட்டத்தட்ட ஒரு சர்வதேசப் பிரச்னையாக இப்போது வளர்ந்திருக்கிறது.

கொஞ்சக் காலத்திற்கு முன்புவரை, வெளிநாடுகளில் அந்தநாட்டின் உணவு நெருக்கடிபற்றி அவ்வளவாகத் தெரியவில்லை. ஆனால் இந்திய அரசாங்கத்தின் சமீபகால தீவிரநடவடிக்கைகளும், திட்டங்களும் நெருக்கடியின் தீவிரத்தை நன்ருக உணர்த்திவிட்டன. இது எவ்வளவு பெரிது என்பதை மற்றெல்லோரையும் விட பாகிஸ்தானிய அறிக்கைகளே தெளிவாகக் குறிப்பிட்டன. அது எவ்வளவு உண்மை என்பது இப்போது தெரிந்துவிட்டது.

சுமார் 20 ஆண்டுகளுக்கு முன், அதாவது யுத்த காலத்தின் கடைசிப் பகுதியில் பெரும் வங்காளப் பஞ்சம் ஏற்பட்டது. சோறுண்ணும் வங்காளிகள் மரத்திலுள்ள இலைகளையும், மண்ணையும்கூட அப்போது சாப்பிட ஆரம்பித்தார்கள். பலர் தற்கொலைபுரிந்தார்கள். பஞ்சத்தினுல் சுமார் 50 லட்சம் பேர் செத்தார்கள். பதுக்கல் பேர்வழிகளினுல் ஏற்படுத்தப்பட்ட செயற்கைப் பஞ்சம் அது.

ஆனுல் இன்றைய நிலை முற்றும் மாறுபட்டது. கடந்த 50 ஆண்டுகளில் ஏற்பட்டிராத கடும் வரட்சி இப்போது ஏற்பட்டிருக்கிறது. ராஜஸ்தான் உட்பட நாட்டின் சிற்சிலபகுதிகளிலிருந்து, ஓரளவு மக்கள் வெளியேற ஆரம்பித்திருப்பதாகச் செய்திகள் கிடைக்கின்றன. ஆனுல் இயற்கையின் சவால் இன்னும் ஒரு உயிரைக்கூட பட்டினியால் கொன்றதாகத் தகவல் இல்லை.

உள்நாட்டில் கையிருப்பிலுள்ள தானியங்கள் நாட்டின் ஒரு பகுதியிலிருந்து மற்றப்பகுதிகளுக்கு பரிமாறிக் கொள்ளப்படுகின்றன. ஓரளவு உணவு வைத்திருக்கும் ராஜ்யங்கள், பற்றுக்குறை ராஜ்யங்களுக்கு சிலவற்றை அவசரமாக அனுப்பிவருகின்றன. அதே சமயம் டில்லி அரசாங்கம் பல்வேறு முறைகளில் தீவிர சாகுபடித் திட்டங்களையும், பரிவர்த்தனை திட்டங்களையும் மேற்கொண்டிருக்கிறது. மத்திய, ராஜ்ய ரீதிகளில் அடிக்கடி பல ஆலோசனைகளும், மகாநாடுகளும் நடைபெற்றுவருகின்றன. இத்தகைய நாடகங்கள் வெளிஉலகின் கவனத்தை வெகுவாக ஈர்த்து வருகிறது.

மொத்தத்தில் சீன அபாயம், பாகிஸ்தானிய அபாயம் ஆகியவற்றுடன் உணவுப் பிரச்னையும், மூன்ருவது அபாயமாக நாட்டை எதிர்நோக்கியுள்ளது. எனினும் உணவு உற்பத்தியில் சுயதேவை பூர்த்திலட்சியத்தை அடையும் முயற்சி தளர்த்தப்படவில்லை. 4-ம் ஐந்தாண்டுத்திட்டத்தில் பல கோடிக்கணக்கான பணம் இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது என்பது பலருக்குத் தெரிந்திருக்கும்.

என்ருலும் இந்தியாவின் தற்காலிக கஷ்டத்தில் கைகொடுக்க அமெரிக்கா முன்வந்திருப்பது டில்லிக்குச் சற்று ஆறுதலளித்திருக்கும். அடுத்த ஆண்டு உணவுத் தேவை முழுவதையும் அமெரிக்கா சப்ளைசெய்யும் என்ற நம்பிக்கையை உணவு மந்திரி சுப்ரமண்யம் கொண்டு வந்திருக்கிருர்.

அமெரிக்காவிடம் ஒரு கோடிடன் உணவுப்பொருட்களைத்தான் இந்தியா கேட்டதாயினும், ஒன்றரைக் கோடி டன்களை சப்ளைசெய்ய அந்தநாடுமுன்வந்திருப்பதாகத்தெரிகிறது சப்ளைகள்ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டன. 3 மாதங்களில் 20 கோடி ரூபாய்பெறுமதியான கோதுமை அவசர உதவியாக இந்தியத்துறைமுகங்களில் இறக்கப்படும்.

அமெரிக்காவிடம் ஏராளமான உபரி தானியங்கள் இருக்கின்றன. அமெரிக்க பொதுச்சட்டத் (பி.எல்.480) தின்படி கப்பல் கட்டணத்தில் ஒரு பகுதி மட்டுமே டாலராகச்செலுத்தப்படவேண்டும். சிலவற்றுக்கு டாலர் பிரச்னை இருக்காது எனக் கருதப்படுவதால் அவற்றுக்கு வெளிநாட்டுச் செலாவணிக் கஷ்டம் ஏற்படமாட்டாது.

இந்திய உணவுப் பிரச்னையைத் தீர்க்க அமெரிக்கா மட்டுமின்றி, ஓரளவு சர்வதேச அடிப்படையிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. கனடா, ஆஸ்திரேலியா, ஜப்பான், ஜெர்மனி, ஸ்கான்டிநேவிய நாடுகள் ஆகியவற்றுடன் உணவுப்பொருள், கப்பல் வசதி ஆகிய விஷயமாக தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

இந்தியாவில் மட்டுமன்றி சீன, ரஷ்யாபோன்ற பெரிய கம்யூனிஸ்ட் நாடுகளும் உணவுப்பிரச்னையை எதிர்நோக்கியுள்ளன. ஒரு காலத்தில் உணவுக்களஞ்சியமாகத் திகழ்ந்த கிழக்கு நாடுகள் இப்போது மேற்கு நாடுகளிடம்உணவுக்குக் கையேந்தி நிற்பது காலத்தின் கோலமா அல்லது கடவுளின் தண்டனையா என்பது தெரியவில்லை.

இந்தியாவைப் பொறுத்தவரை அமெரிக்க உதவி நீண்டகாலத்திற்குக் கிடைக்காது என்பதும், சிலஆண்டுகளில் உணவுத்துறையில் சுயதேவைப் பூர்த்தியடைய வேண்டும் என்பதும் வாஷிங்டனின்கொள்கை. 47 கோடி பேருக்கு தொடர்ச்சியாக எவரும் அன்னதானம் அளிக்கமாட்டார்கள் என்பதை இந்தியத் தலைவர்கள் நன்கு உணர்ந்திருப்பது வரவேற்கத்தக்கது.

★

## ஐ. நா. 20-ம் கூட்டம்

ஐ. நா. 20-வது பொதுச் சபைக்கூட்டம் ஆரம்பமான போது உலக ஸ்தாபனத்தையே தகர்க்கும் பல அபாயங்கள் ஏற்பட்டிருந்தன எனினும் எல்லா முட்டுக்கட்டைகளையும்தாண்டி திட்டமிட்டபடி கூட்டம் முடிந்திருக்கிறது.

ஐ. நா. அமைதிப்பணிக்கான பங்குப்பணம் ஆரம்ப கட்டத்திலேயே நெருக்கடியையுண்டுபண்ணியது அதை தொடர்ந்து எத்தனையோ பிரச்னைகள். இந்தியா-பாகிஸ்தான் சண்டை, கம்யூனிஸ்ட் சீன பிரதிநிதித்துவப் பிரச்னை, ரொடீஷிய கலகம், வியட்னும் சண்டை, ஏடன் நிலைமை, ஏமன் பிரச்னை, தென்னுபிரிக்க இனவெறி, போர்த்துக்கல் காலனி பிரச்னை உட்பட ஏராளமான விஷயங்கள் சபையின் விவாதத்திற்கு வந்தன. எதுவாயினும் சர்வதேச ஒத்துழைப்பு ஆண்டான 1965-ம் ஆண்டு சண்டைகளும், கெடுபிடிகளும், பிரச்னைகளும் நிறைந்த ஆண்டாகஇருந்தது, ஐ. நா. வுக்குப் பெருமையளிப்பதாயிருக்கவில்லை.

ஐ. நா., அமெரிக்காவின் கைப்பொம்மை என கம்யூனிஸ்ட் நாடுகள் பொதுவாகக் கூறுவது உண்டு. ஆயினும் அது ஆசிய-ஆபிரிக்க நாடுகளின் கைப்பொம்மையாக மாறிவருவதையும் உணரலாம். ஆசிய-ஆபிரிக்க நாடுகள் கொண்டு வரும் முன்னேற்றமான தீர்மானங்கள் பலவற்றை பெரும்பான்மை வாக்குகளால்சபை நிறைவேற்றி வருவது கண்கூடு. இந்த ஆண்டு பொதுச் சபையிலும், அதன் பல்வேறு கமிட்டிகளிலும் பல நல்ல தீர்மானங்களை ஆசிய-ஆபிரிக்கநாடுகள் கொண்டு வந்து நிறைவேற்றின. பெரும்பாலான மேற்குநாடுகள் அவற்றை ஆதரித்தே வாக்களித்தன என்பது கவனிக்கத் தக்கது பிறநாடுகளின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடக்கூடாது என்ற பிரகடனத்தை நிறைவேற்றிய பின் சபை கலைந்தது. ஐ. நா. எவரதுகைப்பாவையும் அல்ல. அது சுதந்திரமாக இயங்கும் ஸ்தாபனம் என்பதற்கு இவை அத்தாட்சிகள். ஆனுல் சபையில் நிறைவேறும் தீர்மானங்களை எத்தனை நாடுகள் அமுல் நடத்துகின்றன என்பது வேறு விஷயம். ஐ. நா. சட்டமியற்றும் சபையாக, அல்லது உலகஅரசாங்கமாக இல்லாதவரை நிலைமை இப்படியேதான் இருக்கும்.

★

## மாணவர் கிளர்ச்சி

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சமீபத்தில் ஏற்பட்ட மாணவர் கிளர்ச்சியால் உண்டான அலை ஓசை இன்னும் ஓயவில்லை வளர்ச்சிபெற்றுவரும் மாணவர் சமுதாயத்தில், சுதந்திர உணர்ச்சி சரியானமுறையில் திருப்பிவிடப்படாமல் கட்டுக்களை மீறிச் சிதறிவருவதையே இச்சம்பவங்கள் காட்டுகின்றன. நமது பல்கலைக்கழகத்தில் மட்டுமின்றி இதர நாடுகளிலும் பட்டதாரி மாணவர்கள் கிளர்ச்சி செய்து வருவது கடந்த சில ஆண்டுகளாக சகஜநிகழ்ச்சிகளாகும்.

சென்றஆண்டு பெர்கெலியில் உலகத்தின்மிகப்பெரும் பல்கலைக்கழகங்களில் ஒன்ருன கலிபோர்னியா பல்கலைக் கழக மாணவர்கள் மாபெரும் கிளர்ச்சியில் ஈடுபட்டார்கள். பல நிபந்தனைகளை முன் வைத்து பட்டதாரி மாணவர்கள் மேற்கொண்ட கிளர்ச்சி அது. கிளர்ச்சியின் எதிரொலி பல மாதங்கள் நீடித்தது. அமெரிக்க மாணவர்களும், வெளிநாட்டு மாணவர்களுமாக 27,500 பேர் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் கற்கிருர்கள். நோபல்பரிசு பெற்ற பலரை அது உற்பத்தி செய்திருக்கிறது. பல்லாயிரக்கணக்கான மாணவர்களின் கிளர்ச்சிஅங்குவெற்றி பெற்றது.

சில மாதங்களுக்கு முன் இந்தியாவிலுள்ள அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகம், காசி ஹிந்து பல்கலைக்கழகம் ஆகியவற்றிலும் மாணவர் கிளர்ச்சிகள் நடைபெற்றன அவற்றிலுள்ள ஹிந்து, முஸ்லிம் என்ற 'வகுப்பு'ப் பெயர்களை மாற்ற இந்திய கல்வி அமைச்சர் மேற்கொண்ட முடிவே இதற்குக் காரணம். காசியில் மாணவர்களுக்கு ஆதரவாகமாபெரும் ஹர்த்தாலும் நடைபெற்றது. இரு கிளர்ச்சிகளிலும் பல மாணவர்கள் கைதாஞர்கள். சபையில் இது சம்பந்தமான மசோதா ஒத்திவைக்கப்பட்டது.

ரஷ்யா, ஜப்பான் உட்பட வேறுபல நாடுகளிலும் பல்கலைக்கழக மாணவர்கள் சமீபத்தில் கிளர்ச்சிகள், ஆர்ப்பாட்டங்களை நடத்தியிருக்கிருர்கள்.

மாணவர்களிடையே ஏற்படும் இவ்விதக் கிளர்ச்சிகள் அறிஞர்கள், கல்விமான்கள், மனோதத்துவ நிபுணர்கள் ஆகியோருக்கு இன்னும் தீராதபுதிராகவே இருக்கின்றன.



## சிவானந்த தபோவனம்

அவன் அருளாலே அவன் தாழ் வணங்கி ஏழைகளினதும் வாய்ப்பு நழுவியவர்களினதும் வாழ்வை வளம்படுத்த முன்வந்திருக்கும் பெரியார்களின் உழைப்பினுல் நிறுவப்பட்டுள்ளது திருக்கோணமலை சிவானந்த தபோவனம். இத்தபோவனம் தெய்வீகமணத்துடன் நமது இன மத பண்பாட்டை மையமாகக்கொண்டு ஓங்கிநிற்கின்றது. வறியவர்களுக்கு மட்டும்தான் இவ்வுலகில் வாழ்க்கை பாலைவனமாக மாறுமென்பதில்லை. காலச்சூருவளியில் சிக்கி கண்ணீரும் கம்பலையுமாக வாழ்ந்துகொண்டிருக்கும் பலர் உள்ளனர். இவர்களின் இருண்ட வாழ்வை மலரச்செய்ய சிவானந்த தபோவனம் முன்வந்துள்ளது.

## இலங்கை வானெலி

(4ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டிய சீர்திருத்தங்களை ஆராய்ந்தது.

மாட்சிமை தங்கிய எலிசபெத் மகாராணி தம்பதிகள், பிறநாட்டுப் பிரதமர்கள், விருந்தினர்கள், விஞ்ஞான மேதைகள், வான வெளி வீரர்கள எனப்பட்டோர் இங்குவிஜயஞ்செய்த போதும், உள்நாட்டில் வளர்ந்த பல சம்பவங்களை ஒலிபரப்பியபோதும் இலங்கை வானெலியின் சேவையைப் பாராட்டாதாரில்லை.

இன்னும், நிரந்தரநிலைய வாத்தியக் கோஷ்டி அமைப்பு, கலைவிழாக்கள், விசேஷ தின நிகழ்ச்சிகள், கூட்டுப்பிரார்த்தனை அஞ்சல்கள் ஆகிய நிகழ்ச்சிகளால் ஒலிபரப்புச் சேவையில் பெரும் முன்னேற்றம் ஏற்படலாயிற்று.

''சிறுவர் நிகழ்ச்சி சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் வருகிறதே, தமிழில ஏன் தருகிருர்கள் இல்லை'' எனத் தன் குழந்தைகள் வினவுகிருர்களென்று தபால் தந்திப் பகுதித்தலைவருக்கு எழுதி, அதனை 1937-ம் ஆண்டில் தமிழிலும் பெற்றுக் கொடுத்த திரு. எம். ஏ. நடராசா இன்று ஓய்வு பெற்று வெள்ளவத்தையில் வசிக்கிருர்.

நெருநல் உளனெருவன்
இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து
இவ்வுலகு.

கூட்டுப்பிரார்த்தனை, திருவெம்பாவைஅஞ்சல்களோடு பெரிதும் தொடர்பு கொண்டு பெரும்பணி புரிந்த திரு. எம். எஸ். திருவிளங்கம் அவர்களும், திரு. கே. வயிரமுத்து அவர்களும்இன்றுஇவ்வுலகில்இல்லை

பாவலர் நாவலர், கலைஞர் கவிஞர், பேச்சாளர் எழுத்தாளர், பாடகர் பாடகி, நடிகர் குழு நாட்டியக் குழு, ஆசிரியர் மாணவர் என்போர் நாட்டின் நாலுபக்கங்களிலும் பெருகியிருக்கின்றனர். உள்நாட்டில் உப நிலையங்களை தோற்றுவித்து அவர்கள் அனைவரையும் ஒன்று சேர்த்து இலங்கை வானெலி இன்னும் சிறந்த சேவை செய்யுங்காலம் நெருங்கி வருகிறது. தற்போது செய்யப்படும் மூன்ருவது விசாரணைக்குழு அத்துறையில் ஆவன செய்யுமென எதிர்பார்க்கிருேம். கலை வளர்ச்சிக்கு முக்கிய அம்சம் அரசாங்கம் ஊக்கங் காட்டுதலேயாகும்.

இலங்கை வானெலி நிலையத்தை இயக்கிவரும் சகல உத்தியோகத்தருக்கும் நம் நன்றிகூறி அவர்கள் சேவை மென்மேலும் செழிப்புறுக என்று வாழ்த்துவோம்.

(இலங்கை வானெலி ஒலிபரப்புசேவையின் 40 ஆண்டு நிறைவைஒட்டி 19-12-65ல் நிகழ்த்திய வானெலிப் பேச்சு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அயல் நாடுகளில் சைவம் - 5

## பாபிலோனியா நாட்டில் சிவ வழிபாடு

— ந. சி. கந்தையாபிள்ளை —

சுமேரிய நாட்டுக்கு வடக்கில் பாபிலோன் பட்டினத்தைத் தலைநகராகக் கொண்டிருந்த நாடு பாபிலோனியா என அறியப்பட்டது. பாபிலோனியா என்பது பகலவன் வழிபாடு காரணமாகத் தோன்றியபெயர். பேபெல் என்னும் கோபுரம் அங்குதான் எழுப்பப்பட்டது. அக் கோபுரம் பகற் கடவுளின் கோவிலாகவிருந்தது. பாபிலோனியரின் மாதங்கள் ஒன்றின் பெயர் சிவன். சிவன்மாதமெனத் தேதி இட்டு எழுதப்பட்ட சுடுமண் ஆவணங்கள் பல அங்கு கிடைத்துள்ளன. பாபிலோனியரின் முழுமுதற் கடவுளின் பெயர் மார்துக். மார்துக் கடவுளின் உருவச் சிலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவ்வுருவம் தாடியுடையதாய் 'இடியேற்றை கையிற்பற்றி, இடபத்தின் மீது நிற்கின்றது. மேலே மூன்று கவரும் கீழே மூன்று கவருமுடைய ஆயுதத்தை (சூலாயுதத்தை) மேற்கு ஆசிய மக்கள் இடியேறு எனப்பெயரிட்டுவழங்கினார்கள். கௌதமபுத்தரின் உருவத்தை சீனா, யப்பான், சீயம், பர்மா முதலிய நாடுகளின் ஓவியக்கலைஞர் எழுதியிருக்கின்றனர். அவை இந்தியச் சிற்பிகளும் ஓவியரும் வரைந்த புத்தர்வடிவங்களிலும் சிறிது மாறுபட்டனவாக விருக்கின்றன. இதற்குக் காரணம், அந் நாடுகளின் பண்பாடுகளைத்தழுவி ஓவியங்கள் எழுதப்பட்டதாகும். இதனை ஒப்பவே பாபிலோனியரும் இந்தியாவிற் காணப்படும் சிவன்வடிவிலும் சிறிது வேறுபட்ட வடிவினை அமைத்து வைத்து வழிபட்டார்கள். கி. மு. 2000-ல் ஹமுரபி என்னுமரசன் பாபிலோனியாவை ஆட்சி புரிந்தான். அவன் காலத்து வழங்கிய உருளை வடிவான முத்திரைகளில் சூலப்படையைக் கையிற் பிடித்துக்கொண்டு இடபத்தின்மேல் நிற்கும் தந்தைக் கடவுளின் வடிவம் காணப்படுகின்றது 1. முற்காலத்தில் மாதப்பெயர்கள் கடவுளர்களின் பெயர்களாகவிருந்தன. இதனால் சிவன்வழிபாடு பாபிலோனியாவில் மிகத்தொன்மையேவளர்ச்சி பெற்றிருந்ததெனத் தெரிகிறது. திராவிட வேந்தனை மனுவைச் சம்பந்தப்படுத்திக் கூறும் பெரிய வெள்ளப்பெருக்கின் நிகழ்ச்சியை ஒத்த வரலாறு பாபிலோனியர்களிடையும் வழங்கிற்று. வெள்ளப் பெருக்குச் சம்பந்தப்பட்ட பாபிலோனியரின் பழங்கதையில் நீர், மீன் முதலிய தமிழ்ச்சொற்கள் காணப்படுகின்றன.2 சாலதியா எனப் பெயர் பெற்று விளங்கிய பாபிலோனியாவின் பகுதிக்குத் தலைநகராகவிருந்த பட்டினம், ஊர் எனப்பெயர் பெற்றிருந்தது. ஊர் என்பது இன்றும் தென்னாட்டில், ஊர்களுக்கும் பட்டினங்களுக்கும் வழங்கும் பெயராகவிருக்கின்றது. சாலதியா என்னும் பெயர் சோழதேசம் என்னும்சொல்லின் திரிபாகவுள்ளதெனக் கல்கத்தாச் சர்வகலாசாலையைச் சேர்ந்த அபினஸ் சந்திரதாஸ் என்னுமறிஞர் இருக்குவேத இந்தியா என்னும் தமது நூலிற் கூறியிருக்கின்றார் 4.

பாபிலோனியரின்கோவிற் கட்டிடங்கள், சிற்பங்கள், கோவிற்கிரியைகள், விழாக்கள் என்பவை இன்றும் தென்னிந்தியாவிற் காணப்படுவன போலவேயிருந்தன. பாபிலோனியரின் சிற்பக்கலை வேலைப்பாடுகள் தென்னிந்திய மக்களின் ஆகமக் கொள்கையோடு தொடர்புடையவை என இந்திய இலங்கைக் கலையும் தொல்பொருளாராய்ச்சிக் கலையும் (Indian and Singhalese art and Archaeology) என்னும் தலைப்பின் கீழ் ஆங்கிலக் கலைக்களஞ்சியம் கூறுகின்றது. மொகஞ்சதாரோ முத்திரைகளும் மட்பாண்டங்களும் மெசப்பெதேமியாவிற் கண்டுபிடிக்கப்பட்டன. மெசபெதேமியாவென்பது சுமேரியா, பாபிலோனியா, சாலதியா, அக்கேடியா முதலிய பழைய நாடுகளடங்கிய மேற்கு ஆசியநாட்டுக்கு கிரேக்கர் இட்டுவழங்கிய பெயர். இப்பொழுது ஈராக்என்னும் பெயர் பெற்றுள்ள பகுதியில் இப்பரப்பு அடங்கும். இந்தியாவுக்கும் மெசபெதேமியாவுக்கு மிடையில் பண்டைக்காலத்தில் வாணிகத் தொடர்பும் போக்குவரத்துமிருந்து வந்தன. பாபிலோன் நகரில் தமிழர் கடைகளிருந்ததற்கு ஆதாரம் அங்கு சூளையிட்ட களிமண் தட்டுகளில் எழுதப்பட்டிருந்த குறிப்புகளால் தெரியவருகிறது. புத்தர் காலத்துக்குமுன் எழுதப்பட்ட பவேரு சாதகத்தில் இந்திய வணிகர் பாபிலோனுக்கு (பவேருவுக்கு) மயில்களைக் கொண்டு சென்ற செய்தி காணப்படுகிறது.

1. Encyclopaedia of Religion and Ethics.

2. Origin and Spread of the Tamils V. R. Ramachandra Dikshitar.

3. Encylopaedia Britannica.

4. Rigvedic India - Apinus chandra das.

## கலண்டர் இனும்!!

1966-ம் ஆண்டுக்கான கலண்டர் ஒன்றும் உங்களுக்குக் கிடைக்கவில்லையா? கேவலம். இந்தக் கலண்டருக்காக வாடிக்கைக் கடைக்காரர்களிடமெல்லாம் தாண்டவமாடாமல், உங்கள் வீட்டில் பழையகாகிதங்கள் வைத்திருக்கும் இடத்திலோ வேறு எப்படியாகினுமோ தேடி 1955 அல்லது 1949 அல்லது 1938வருடத்திய கலண்டர் அட்டவணைகளில் ஏதாவதொன்றினை எடுத்துக் கொண்டீர்களேயானால் உண்மையில் நீங்கள் அதிர்ஷ்டசாலிகள் தான். “1966” என எழுதி 1955, 1949, 1938 என்ற இலக்கத்தின் மேல் ஒட்டிவிடுங்கள். அசல் 1966-ம் ஆண்டுக் கலண்டர் மாதிரியேதான் இருக்கும். ஒரு சிறு வித்தியாசமுமில்லை. வருடம் பூராவும் பாவிக்கலாம். இக்கலண்டரையே பவுத்திரமாக வைத்திருந்தீர்களேயானால் மீண்டும் 1977, 1983, 1994 ஆகிய ஆண்டுகளிற் பாவிக்கலாம். அனுப்பியவர்:- சி. சுதந்திரராஜா, தாவடி.

## ‘சில்லாலை ஏறு!’

பஸ் கண்டக்டர்: மாதகல், பண்டத் தரிப்பு, சில்லாலை ஏறுக.

(ஒரு பிரயாணி பஸ் சக்கரத்தில் ஏறுகிறார்.)

பஸ் கண்டக்டர்: (அப்பிரயாணியைப் பார்த்து): முட்டாள்! ஏன் சில்லால் ஏறுகிறீர்?

பிரயாணி: நான் மாதகல் போகவேணும். அதனால் தான் சில்லாலை ஏறுகிறேன்.

அனுப்பியவர்: சுகந்தி “வடிவேல் உதயம்”, கோண்டாவில்.

# சிறுவர் பூங்கா



## விளம்பர மன்னன் விநாயகன்!

— பொ. சண்முகநாதன் —

“தலை வழுக்கையானவர்கள் கவலைப்படத் தேவையில்லை. அதிகமான மூளையுள்ளவர்களுக்கு — அதிகமாக மூளையைப் பயன்படுத்துகிறவர்களுக்கு தலை வழுக்கையாகிக்கொண்டே போகும். உதாரணமாக குருஷ்சேவைப்பாரீர்… ராஜாஜியைப் பாரீர். நேருவைப் பாரீர்.

“உருண்டைத் தலைதான் அழகென்று சொல்லுவது தவறு. நீள்வட்டத் தலையை உடையவர்கள்தான் அறிஞர்களாகவும்புத்திக்கூர்மை உடையவர்களாகவும் இருப்பார்கள். எடுத்துக்காட்டு வேண்டுமானால் காலஞ்சென்ற கல்கியைப் பாருங்கள். அண்ணாதுரையைப் பாருங்கள். பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனாரைப் பாருங்கள்…”

மேற்படி ஆராய்ச்சிக்கு முடிவுகளையெல்லாம் நீங்கள் யாராவது சொல்லக் கேட்டிருக்கிறீர்களா? அப்படியானால் அப்படிச் சொன்னவர் நிச்சயமாக விநாயகமாகத்தான் இருக்க வேண்டும். விநாயகத்துக்கும் வழுக்கையான — உருண்டையற்ற தலைதான். அதனால், தானும் ஓர் உயர்ந்த அறிஞர் என்பதை விளம்பரப்படுத்துவதற்காக இப்படியெல்லாம் சம்பந்தா சம்பந்த மில்லாமல் கூடப் பேசிக்கொள்வார்.

ஃ ஃ ஃ

யாழ்ப்பாணத்திலுள்ள முட்டாசு கடைச் சந்திக்கருகே பத்து ரூபாயுடன் ஒரு மணிப் பர்ஸ்கண்டெடுத்துள்ளேன். அதற்குரியவர் பின்வரும் முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும்.”

“சென்ற புதன்கிழமை கொண்டாடப்பட்ட எனது பிறந்ததினத்தை முன்னிட்டு ஏராளமானவர்கள் ஆயிரக் கணக்கில் ஆசிச் செய்திகள் அனுப்பியிருந்தார்கள். அவர்கள் எல்லோருக்கும் எனது நன்றி உரித்தாகுக. தனித்தனி பதில் எழுத நேரமில்லாமல் தவிக்கிறேன்..”

இப்படியான சில விளம்பரங்களை அடிக்கடி விநாயகம் பத்திரிகைகளில் வெளியிடுவார். எழுத்தாளனாகவோ பேச்சாளனாகவோ திறமைசாலியாகவோ பொதுத் தொண்டனாகவோ இல்லாத விநாயகத்தின் பெயர் பத்திரிகைகளில்வெளிவரவேண்டுமானால் இப்படி ஏதாவது செய்தால்தானே முடியும்? ஆனால் இவர் ‘பர்ஸ்’ கண்டெடுத்திருக்கவும் மாட்டார்; ஆசிச்செய்திகள்பெற்றிருக்கவும் மாட்டார்.

“என்னுடைய பெருமையும் மதிப்பும் இந்த ஊர்ச் சனியன்களுக்குளங்கே தெரியப்போகிறது. பிற இடங்களிற் பார்க்கவேண்டும்! என்னை யார் கண்டாலும் ‘ஐயா ஐயா’, ‘சார் சார்’, ‘மாத்தயா மாத்தயா’ என்று காலில் விழுந்துகும்பிடாத குறையாக என்னிடம் வருவார்கள்.”

இப்படி விநாயகம் இங்கு மட்டும்தான் சொல்லுகிறார் என்று நான் நினைத்த காலமும் உண்டு. ஆனால் உண்மையில் இவர் போகுமிடமெல்லாமே இப்படித்தான் தன்னைப்பற்றிப்பொய் விளம்பரம் செய்துகொண்டு திரிகிறார் என்பது பின்புதான் தெரியவந்தது.

ஃ ஃ ஃ

விநாயகத்துக்கு சிலவேளைகளில், எப்படியோ தெரியவில்லை, பெரிய மனிதர்களிடமிருந்தும் — பெரிய இடங்களிலிருந்தும் கடிதங்கள் வருவதுண்டு. இந்தச் சங்கதிகள் அவரது நண்பர்கள், உறவினர்களுக்குத் தெரிய வேண்டாமா? இதற்கு அவர் ஒரு நவீன விளம்பர முறையைக் கடைப்பிடித்து வருகிறார். அப்படியான கடிதங்களிலும் கடித உறைகளிலும் எழுதப்பட்ட பக்கத்தில் ஒரு இலேசான சிவப்புக்கோடு கீறி வைத்திருப்பார். கடிதத்தின் எழுதப்படாத பக்கத்தில் கடிதம் எழுதுவார். அக்கடிதத்தைக் கடித உறைக்குள் வைத்து கடித உறையின் எழுதப்படாத பக்கத்தில் ஒரு வெள்ளைத்தாளை ஒட்டி அதில் முகவரி எழுதி தனது உறவினர், நண்பர்களுக்கு அனுப்புவார்.

‘கடித உறையும் தாள்களும் அவசரத்தில் அவருக்கு அகப்படவில்லைப்போலும்’ என்று நினைத்துக்கொண்டு, அதே நேரத்தில் உறவினர்கள், நண்பர்கள் முக்கியமாக சிவப்புக்கோடு இல்லாத பக்கத்தைப் பார்க்காவிட்டாலும்கூட சிவப்புக்கோடு உள்ளபக்கத்தையே பார்க்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருப்பார்விநாயகம்.

இதுபோலவே நண்பர்கள் யாராவது விநாயகத்திடம் நூல்கள் ஏதாவது கேட்டாலும் விநாயகம் அந்த நூல்களுக்குள் தனது புகைப்படங்கள், நற்சான்றுப் பத்திரங்கள், பாராட்டுக் கடிதங்கள் முதலியவற்றைத் தெரியாததுபோல் வைத்துக்கொடுப்பார். ‘பிறகு ‘ஓகோ, இவைகளும் இதற்குள் வந்துவிட்டனவா? இவைகள் எப்படித்தான் இதற்குள் வந்தனவோ? நான் எத்தனை நாட்களாக இவைகளைத் தேடுதேடென்று தேடி அலுத்துவிட்டேன்” என்றுசொல்லிக்கொண்டே அவைகளை எடுத்துக்கொள்வார். இந்த நேரத்தில் எப்படியும் அந்த நண்பர்கள் அவைகளை வாங்கிப் பார்ப்பார்களல்லவா?

அதோ, நான் அவருக்கு முன் வந்து நிற்பதையும் மறந்தவராய் ஏதோ யோசனையில் எதற்காக விநாயகம் ஆழ்ந்திருக்கிறார்? ஓகோ, அறிவாளிகளுக்கும் சிந்தனையாளர்களுக்கும் மறதியும் யோசனையும் அதிகம் என்பதை மறந்து விட்டேனா?

## பூனைக்குட்டி

மியாவ் மியாவ் பூனைக்குட்டி
மீசைக்கார பூனைக் குட்டி
மீனைத் தின்னும் பூனைக்குட்டி
மீண்டும் வரும் பூனைக்குட்டி
பாலை திருடிக் குடித்துவிடும்
பயந்து சாகும் பூனைக்குட்டி
பஞ்சு போன்ற பூனைக்குட்டி
பதுங்கி நிற்கும் பூனைக்குட்டி!

“இணையன்”, சென்னை-21.

அழுக்கணவன், புழு, பூச்சி 3-ம் அழிப்பதற்கு புதிய ஜெர்மன் மருந்து

BAYER

பொலித்தியோன்

FOLITHION

விநியோகஸ்தர்கள் இல்லாத கிராமங்களில் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

T'GRAMS:- ROYAEL ROYAL DISPENSARY PHONE: 397 JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாயிறு கதை மலர்

# பாவத்தின் நிழல்

## எஸ். சண்முகநாதன்

கலகலக்கும்ஒளியில் தன் சிந்தையைப் பறிகொடுத்து நிற்கிறாள் அவள். எதிரில் மார்க்கட்டில் மரக்கறிச் சாமான்களைப் பரப்பிவைத்துக் கொண்டிருக்கிறார்கள். வருவோரும் போவோரும் விற்பவரும் வாங்குபவருமாக நிறைந்த மக்கள் கூட்டம். அதில் ஈடுபட்டுச்செயலிழந்து நின்ற அவள் உணர்வடைகிறாள். கண்களில் நிழலாகத் தெரிந்த உருவங்கள் இப்போது உருக்காட்டுகின்றன. அவள் ''...ம்ஹும்'' என்ற பெருமூச்சுடன், அடங்காது துடிக்கும் உணர்வுகளைப் பிடித்து இழுத்துத் திரும்புகிறாள்.

அங்கே...!

அவளின் கண்கள் நிலைகுத்தி நிற்கின்றன. துடிக்கும் பார்வை, ஆவலை வெளிக்காட்டுகிறது. ஒரு கணம்தான்; மீண்டும் அமைதியடைகிறது பார்வை. எலிஸின் விரிந்த விழிகளுக்குள் எதிரே அலங்கரித்துக் கொண்டு நிற்கும் கடை. அதன் வியாபாரமினுமினுப்பில் அவள் சொக்கிப் போகிறாள்.

முன்னால் அடுக்கிவைக்கப்பட்டிருப்பவை அலுமினியப் பாத்திரங்கள். அவைகாலைச் சூரியனின் ஒளியில் கதிர்விட்டுப் பிரகாசிக்கின்றன. கண்களைக் குத்தும் ஒளியில் அவைகளைப் பார்க்கிறாள். அங்கே அடுக்கிவைக்கப்பட்டிருக்கும் பாத்திரங்கள் ஒவ்வொன்றும் அவள்விழிகளுள் வந்து நிலைகுத்தி நிற்கின்றன.

அவைகளைப் பார்க்கும்போது அவளுக்குத் தன் குடிசையில் காவிபடிந்து அழுக்கேறி மூலையில் கிடக்கும் பாத்திரங்கள் ஞாபகம் வருகிறது. நேற்று உடைந்து போய் மூலையில் ஓடாகக் கிடக்கும் பானை ... எலிஸுக்குத் தன்வாழ்வின் குறைகள் வந்துநிறைவாகநிற்கின்றன. வேதனைகலந்த சலிப்பு நெஞ்சில் பரவுகிறது. அடைய முடியாதது என்ற உணர்வில் ஏற்பட்ட சலிப்பு. வெறித்த பார்வையில் ஏக்கத்தின் சாயல் படிகிறது.

வெண்கலப் பாத்திரங்களுக்கு மேலே தூக்கப்பட்டிருக்கும் கண்ணாடிகள், முன்னால் வருவோர் போவோரின் உருவங்களைக் கூட்டிக் கொண்டுஅசைகின்றன. அதற்கும் அடுத்தாற் போல் ... அவளின் பார்வையில் அலுப்புடன் அமைதியும் கலக்கிறது. புனிதமான தெய்வங்களின் படங்கள் விதம்விதமான வர்ணங்களில் வெள்ளி பிறேமுக்குள் மின்னுகின்றன.

— அந்தோனியார் அருள் காட்டுகிறார். மேரி, பாலனை அணைத்து அந்த ஒளி தவழும் முகத்தில் கொஞ்சுகிறாள். பாவிகளை ரட்சிக்கும் பரமபிதா, சிலுவையில் தொங்குகிறார் ... அறையப்பட்ட உள்ளங் கையில் இருந்து கொட்டும் செங்குருதி...

அவள் விழிகள் அதில் பதிந்துவிடுகின்றன. பாவிகளின் ரட்சகரான பரமபிதாவின் முன் முடி தரித்தமுகம் அவள் விழிகளில் வந்து விரிந்து நிற்கிறது. கண்ணீர் துளிர்த்துபார்வையை மறைக்கிறது. அதனைத்துடைத்துக் கொள்ளும் நினைவில்லாமல் நிற்கிறாள். மறைந்த பார்வைக்குள் உயிர்த்துடிப்புடன் வந்து நிற்கும் அவரின் அருள்முகம்—

அருள்பொழியும் விழிகள்! அவள் தன்னை மறந்து விடுகிறாள். கைகள் தாமாகவே எழுந்து நெஞ்சைத் தொட்டுக் கொள்கின்றன, எலிஸ் நடந்து கடையின் படியில் ஏறி நிற்கும் போதும் பார்வை அந்தப் படத்திலேயே நிற்கிறது.

''வாங்கம்மா ... வாங்க...''

''அந்தப் படம் என்ன விலை?''

படத்தைக் காட்டுகிறாள். வேலையாள் அவளைப் பார்த்துக் கொண்டே ''எது அதோ... அந்த யேசுவின்ரை ...'' கேட்டுக் கொண்டே படத்தைக் கழற்றுகிறான். அப்போது தான் எலிஸ் தன் நிலை உணர்வடைகிறாள். கை வெறும் மடியைத் தடவிக் கொள்கிறது.

''இப்பவேணும்... காசு கொண்டு வரயில்லை ... விலை என்ன...?''

அவன் அவளை ஒருமாதிரியாகப் பார்த்துக்கொண்டே சொல்கிறான்:

''நாலு ரூபாய்...''

மலர்ந்த அவளிதயம் கருகிச் சுருங்கிப் போகிறது.

கடையைவிட்டு படிகளில் காலடி எடுத்து வைக்கும் போது வேதனையுடன் வெட்கம் சூழ்ந்து கொள்கிறது. திரும்பிப் பார்த்த போது அவன் தன்னையே ஒரு மாதிரியாகப் பார்த்துக் கொண்டு நிற்பது தெரிகிறது. ஏதோ நினைவில் சிரித்துக் கொள்கிறாள். அவன் ஒருகணம் ஒன்றுமே புரியாமல் தன்னையே பார்த்துக்கொண்டு தன்னைத் தான் பார்த்துச் சிரிக்கிறாள் என்ற நினைவுடன், சிரிக்கிறான். அந்தச் சிரிப்பில் புதியதொரு அர்த்தம் விளங்குகிறது.

எலிஸ் ஒரு படியைத்தான் கடந்திருப்பாள். அவன் குரல் தடுக்கிறது. ''படம் நல்லாத்தானிருக்கு ... உங்கட மனம் படத்தோடதானிருக்கு...'' அவள்திரும்பிப் பார்த்தாள். அவன் சிரித்துக் கொண்டு படத்தைத் துடைக்கிறான். அவள் படியேறி வந்து அவனருகே நிற்கிறாள். அவன் கையில் இருந்ததை அவளிடம் கொடுக்கும்போது, பார்வை ஆளை அளவிடுகிறது.

அவள் சொன்னாள்:

''உசிரோட இருக்கிற மாதிரி இருக்கு... எங்களைப் போல உள்ளவைக்காகத் தான் அவர் பட்டதெல்லாம்...''

படத்தை அணைத்துக் கொண்டாள், தான் செய்யும் பாவம் கண்ணெதிரே வந்து நிற்க - அழுகிறாள்.

அவர், அவர்கட்காகச்சிலுவையில் அறையப்பட்டு இரத்தம் சிந்துகிறார். அவள் தனக்காக - தான் நடத்தும் பாவ வாழ்க்கைக்காகக் கண்ணீர் சிந்துகிறாள்.

கண்கள் கலங்கிக்குளமாகிவிடுகிறது. அவன் அனுதாபத்துடன் பார்த்து அர்த்தத்துடன் சிரிக்கிறான்.

''கிட்ட எண்டால் பிறகு வந்து வாங்குங்கோவன்...''

''ஓம், நான்கோட்டையடிதான்... நீங்க புதிசு. கடையும் புதுக்கடை...''

''இப்ப திறந்து கொஞ்சநாட்தான் எல்லாம் உங்களுக்காகத்தான்...''

சொல்லும்போதே கண்களைச் சிமிட்டிப் புதுபாவத்துடன் சொன்னான்.

''நான் இஞ்சைவந்து ஆறு வரிசமாச்சு...''- அதனைக் கூறும்போதே அந்த நாட் தொட்டுதான் நடாத்தும் பாவ வாழ்க்கை நினைவுக்கு வர, நெஞ்சு அடைக்கிறது.

அவள் ஆறுவருடத்திற்கு முன்புதான் வந்தாள். வாழ்க்கைத் துணையுடன் நெஞ்சிலே மகிழ்வையும் சுமந்து கொண்டு வந்தாள். ஆனால் கொஞ்சநாட்செல்ல அந்தச் சுமையைவிட அதிகமான வேதனை தான் நெஞ்சில் நிரம்பி வழிந்தது. எப்படி அவள் அவனை நம்பி ஓடி வந்தாளோ அதேபோல் ஆறு மாதத்தின்பின் அவன் இன்னொருத்தியுடன் ஓடிவிட்டான். அவள் வேதனைப்பட்டாள். கொஞ்சநாட்களுக்குத்தான்-அடுத்த வீட்டுத் திரேசா அவளுக்குவாழ வழி காட்டி வைத்தாள்.

அவள் அந்த வழியில் இன்றும் வாழ்கிறாள்.

அவள் தன் பழைய வாழ்வின் நினைவில் ஆழ்ந்துவிட்டதை உணர்ந்து அதனை அகற்றும் பகீரதப் பிரயத்தனத்துடன் சிலிர்த்துக் கொண்டு நிமிர்கிறாள். அவன் தன்னையே விசித்திரமாகப் பார்ப்பதை உணர்கிறாள். என்ன நினைக்கிறானோ என்ற நினைவில் சிரிக்கிறாள்.

அவன் படத்தைக் கேட்காமல் கையை நீட்டுகிறான். அவள், அவன் முகத்தைப் பார்க்காமல் நீண்டு விரிந்திருக்கும் கைகளைத்தான் பார்க்கிறாள். தன் இதயத்தையே பிய்த்தெடுக்க நீண்டிருக்கும் கோரக்கரமாகக் கற்பனை செய்கிறாள். படத்தைக் கைகளில் வைக்கிறான், அப்போதுதான் நிமிர்ந்து பார்த்தாள், அவன் கண்களில் அவளின் வேதனையை-நிலையை, புரிந்து உணர்ந்த ஓர் அனுதாபம் படர்ந்திருக்கிறது.

''நான் அந்த செல்லையா ஒழுங்கை... அதுக்குப் பின்னாலை இருக்கிறன்...''

அவனுக்கு ஏன் இப்போது [illegible]

என்றவினா உள்ளத்தில் மேலோட்டமாக எழுந்தாலும் அதன் உள்ளாந்திரத்தை இதயபூர்வமாக அறிந்திருந்தாள். அவள் தன்னிடம் எதையோ எதிர்பார்க்கிறாள் என்றநினைவில், தான் அவளிடம் எதிர்பார்ப்பதை நினைத்தபோது அவன் தன்னையும் அறியாமல் சிரித்துக் கொண்டான்.

அவள் படிகளில் இறங்கி றோட்டில் கால் பதித்து நடக்கிறாள்.

அவன் அவளையும் அந்தப் படத்தையும் பார்த்துச் சிரித்துக்கொண்டான்.

இருளின் திரை விரிகிறது. எலிஸ் தன் குடிசையில் அமர்ந்திருக்கிறாள். சூழ்ந்து வரும் இருளை அகற்ற ஒளி விளக்கு ஏற்றி வைத்திருக்கிறாள். மூலையில் சிறுவிளக்குப் பொட்டுப் பொட்டென ஒளியைச் சிந்திக் கொண்டிருக்கிறது. அவள் அதனையேபார்த்துக் கொண்டிருக்கிறாள். காற்றின் அணைப்பில் துடித்து மீண்டும் நேராகச் சுடர் விடுகிறது. நிலையாக நின்றெரிய அதனால் முடியாது. அணைக்கும் காற்று அடித்து விட்டால் அணைந்துவிடும். ஆனால் அதன் இதமான அணைவில் ஒயிலாக அசையும் போது- அதன் அழகைச் சொல்ல முடியாது.

அந்தச்சுடர் தன் மனதைத்தான் பிரதிபலிப்பதாக உணர்கிறாள். விழிகளில் சுடர் விளக்கு மறைகிறது. அதிலே கருணையே வடிவமான அருள் பொழியும் அவரின் முகம் வந்து நிற்கிறது, சாந்தம் தவழும் விழிகள்— அதிலே அன்பு சுடர்விட்டுக் கொண்டிருக்கிறது.

அவள் விம்முகிறாள்; முழங்காலில் முகம் புதைத்து, குலுங்கிக் குலுங்கி அழுகிறாள். பாபிகளின் ரட்சகரானஅவர்முகம்வர, அதிலே ஒளிவிட்டுச் சுடர் விடும் அன்பு விழிகள் கருணை பொழிய, அந்த விழிகளில் அவள் தன்னையே காணும் போது, காலம் காலமாகத் தான் நடத்தும் நரக வாழ்வுக்காக வருந்தி அழவேண்டும்போல் ஓர் உணர்வு ஏற்பட, அவள் அழுகிறாள். அழுவதனாலே நெஞ்சுச்சுத்தியுடன் சுமையெல்லாம் விலகி லேசாவதுபோன்ற உணர்வு.

நாளைய வாழ்வைப்பற்றி அவள் இப்போது நினைக்கவில்லை. நினைக்கவும் முடியாது. நெஞ்சமெல்லாம் விம்மி நேற்றுவரை வாழ்ந்த வாழ்வுக்காக அழும்போது நாளை தொடரப்போகும் நரக வாழ்வு நினைவில் மட்டுமல்ல நெஞ்சிலுமே இடம் பெறமுடியாது. கண்ணீரால் கழுவுண்டு புனிதமாய் இருக்கும் உள்ளத்தை மீண்டும் நரகமாக்க அவள் விரும்ப மாட்டாள்.

ஆனால் புனிதமான உள்ளத்திலும் பார்க்க கொடுமையான வயிறும், வாழ்வும் வலிமையானது. நேற்றுவரை புழுநெளியும் நரகமாய் இருந்த உடலும் உள்ளமும் இன்று புனிதமாய் இருக்கிறது. களங்கமான தனது இதயத்தை அமைதியாகக் கண்ணீரால் கழுவிக் கொண்டிருக்கிறாளே. அந்தக் கணம் அவள் புனிதமானவள். உண்மை - ஆனால் அடுத்த நிமிடம் ... அதனை அவளால் சொல்லமுடியாது.

எண்ணெய் வற்றிய விளக்கில் ஒளி குறைந்து மங்குகிறது. அவள் அப்படியேஅமர்ந்திருக்கிறாள். அவள்வாழ்வில் அந்தக் கணம் கழிந்து கொண்டிருக்கும் ஒவ்வொரு நிமிடமும் புனிதமானது. கண்ணீரால் கழுவப்பட்ட இதயம்புனிதமானது. அவள் அந்த அமைதியை, புனிதத்தை இழக்க விரும்பாதவள்போன்று அப்படியே அமர்ந்திருந்தாள்.

வெளியே வானம்பிசுபிசுத்துக்கொண்டிருக்கிறது. குளிருடன் கூடிய ஊதற்காற்று பலமாக வீசுகிறது மங்கிய சுடர் காற்றின் வேகத்தில் ஆட்டங்கண்டு கொண்டிருக்கிறது. அடங்கும் உயிரின் ஆவேசத் துடிப்பைப்போல், சுடர் அணையத்துடிக்கிறது.

பாதி திறந்திருந்தபலகைக் கதவைத் திறந்துகொண்டு ஓர் உருவம் உள் நுழைகிறது. கதவு திறந்த சத்தத்தில் அவள் தலை நிமிர்கிறாள். விழிகள் அப்படியே நிலைத்து விடுகிறது. ஒரு கணம்திகைப்பும், மறுகணம் எதிர்பார்த்திருந்தது போன்றதோர் மனநிலையும் ஏற்பட அவள் அமைதியடைந்தாள்.

''ஓ ... நீங்களா...''

அவள் தன் நிலையடைந்து சிரித்துக்கொண்டு எழுந்தாள். கன்னத்தில் வழிந்து காய்ந்துபோயிருந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள்.

வந்தவன், அவள் தோளைப் பிடித்து இருத்தித் தானும் அருகே அமர்ந்து கொண்டான். கண்ணீரைக்கண்டதும் ஏன் அழுகிறாள் என்றவினா எழுந்தாலும் தனக்குத் தேவையில்லாதது என நினைத்து மனதை அடக்கிக் கொண்டான்.

திறந்த கதவின் வழியாகப் புகுந்த காற்று விளக்குடன் விளையாடியது. அதற்கு

(8ம் பக்கம் பார்க்க)

உத்தரவாதத்துடன்

பழைய டயர்களைப் புதுப்பிப்பதற்கும்

திரமான றப்பர் பொருட்களை தொகையாக

பெறுவதற்கும்

மிகச்சிறந்த இடம்.

ஜெனரல் இண்டஸ்ரீஸ் லிமிட்.,

அத்தியடி, யாழ்ப்பாணம்

காட்சி அறை:

20, ஸ்ரான்லி வீதி போன்: 7024

உங்கள் தேவை ! எங்கள் சேவை

" லேடன் " LEYDEN

தயாரிப்புகள்:-

- பெனியன்
- ஸ்போட் சேட்
- ரீ சேட்
- ரெறி சேட்
- ரெறி பிளவுஸ்
- வேபி வெஸ்ட்
- காலுமேஸ் (Nylon & Cotton)

லேடன் காமென்ஸ்

32A, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்தி

த. இந்திரலிங்கம்

நல்லூர் முருகன் தலத்தில் பக்தியான சூழ்நிலை; வானத்திலே வெள்ளிநிலா ஒளி வீசிக்கொண்டிருந்தது. முருகன் தன்னுடைய வீதி வலத்தைமுடித்துவிட்டு ஆலயத்தினுள்ளே பிரவேசித்து விட்டான். அடியார்கள் முருகனைப் பார்க்கவேண்டுமே என்ற ஆவல் நிறைவு பெற்ற மகிழ்ச்சியினாலே உள்ளம் பூரித்த வண்ணம் முருகன் பந்தலிலே அமர்ந்திருக்கின்றனர். எங்கும் அமைதி. அது மயான அமைதியல்ல, தியான அமைதி. அந்த அமைதியான சூழ்நிலையிலே ''பாலுந் தெளிதேனும் பாகும் பருப்பும்'' என்ற குரல்மணிபாகவதரின் வாயிலிருந்து மணியாக ஒலிக்கின்றது.

கண்ணுக்கு, வெண்ணிலவின் காட்சி; காதிற்குப் பாரதக் கதையின் மாட்சி; உள்ளத்திலே முருகனின் ஆட்சி. இவைமூன்றும் ஒருங்கேயமைந்த மனிதனின் மகிழ்ச்சிக்குஅவனது முகமே சாட்சி. அந்த நேரத்திலே யாராவதுசொர்க்கம் வேண்டுமாஎன்றுகேட்டால் அதை எவரும் காதில் வீழ்த்தமாட்டார்கள். தற்செயலாகயார் காதிலாவது வீழ்ந்தாலும் ''கொஞ்சம் பொறுங்கள்'' என்றுதான் பதில் கிடைக்கும். எல்லோரும் ஆவலோடு பாரதக்கதாப்பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

ஒருவர் மட்டும் பிரசங்கத்திலேஆர்வஞ் செலுத்தாது, கூட்டத்திலிருந்து நழுவ முயற்சி செய்கிறார். அவர் "முருகனைக் கண்டேன், முடிந்தது வேலை'' என்று எண்ணினார்போலும். அவர் தன்பக்கத்திலிருந்த நண்பரிடம் 'காதைக் கடிக்கிறார்', இல்லையில்லை காதைக் கடிப்பதுபோல — ஏதோ இரகசியம் கூறுகிறார். நண்பரும் பக்கத்திலிருந்த பையனைப் பார்த்துவிட்டுச் 'சரி' என்பதுபோலத் தலையசைக்கிறார். முன்னவரின் முகத்திலே மகிழ்ச்சி, ஏதோஒரு திட்டத்துடன் சனக்கும்பலிலிருந்து பிரிந்து வெளியே வருகிறார். ஆலயத்தின் வாசலை நோக்கியவண்ணம் தன்னுடைய நெற்றியிலே மூன்றுமுறை தொடுவதுபோலக் குட்டுப் போட்டுவிட்டுப், புகைப் படங்கள் விற்கும் கடையை நோக்கி வேகமாக நடக்கிறார்.

புகைப்படங்கள் விற்கும் கடை ஜெகஜ்ஜோதியாக விளங்குகின்றது. குழாய் விளக்குகள் கண்ணைக் கூசுகின்றன. கண்களை மெதுவாக மூடியவண்ணம், சால்வையைத் தோளிலே போட்டவாறே நிற்கிறார். நாம் முன்பு கூறியவர்— வேட்டியுடுத்துச் சால்வையணிந்தவர். கடை முதலாளி தன்னுடைய சிப்பந்தியைத்தன்னருகிலழைத்து, ''ஆள் கிராமம்போலை ... ... சாமர்த்தியமாகக் கவனி!'' என்கிறான். உடனேசிப்பந்தி வேகமாகச் சால்வைக்காரரினருகிலே வந்து ''என்னய்யா வேணும்?'' என்று அதட்டலாகக் கேட்கிறான். சால்வைக்காரர் ஒரு அலமாரியைக்காட்டி, ''நல்லூர்த் தேர்ப்படம் ஒண்டு என்ன விலை'' என்று கேட்கிறார். தொடர்ந்து, ''அந்தச் சின்னதைத்தான் கேட்கிறன்!'' என்றார். அவர் சுட்டிக் காட்டிய இடத்திலே பெரிதும் சிறிதுமான நல்லூர்த்தேர்ப் புகைப்படங்கள் வர்ணமுள்ளனவாகக் காட்சியளிக்கின்றன. அவற்றைப் பார்க்கிறான் சிப்பந்தி; அங்கே ஏழு சிறிய படங்களும், இரண்டு பெரிய படங்களுமிருக்கின்றன. கிராம மக்களை ஏமாற்றும் வித்தையிலே கைதேர்ந்த அச்சிப்பந்தி, ''எல்லாம் — பெரிசும் சிறிதும் — ஒரே விலை தான்! ஒண்ணு ஒண்ணேமுக்கால் ரூபா!...'' என்கிறான். 'விலை மலிவு'' என்று எண்ணி மகிழ்ந்தவாறே பெரிதாக இருந்த புகைப்படத்திலே கைவைக்கிறார், சால்வைக்காரர். அதைக்கண்ட சிப்பந்தி அப்பொழுதுதான் நினைவு வந்தவன்போல, ''பெரிசு இரண்டையும் வையுங்க! அது யாரோ வாங்கி வைச்சிட்டுப் போனவை! வந்தாக் குடுக்க வேணும்" என்கிறான். சால்வைக்காரர் அசடு வழியும் முகத்துடன் பெரிய படத்தை வைக்கிறார். அப்பொழுதுகூட அவருக்குச் சிறிய பண்டங்களின் விலைதான் ''ஒண்ணே முக்கால்'' ரூபா என்ற மறைமுக உண்மை புரியவில்லை. அப்பொழுதும், ''பெரிதும் சிறிதும் ஒரே விலை! ஆனபடியினால் மலிவு'' என்றே எண்ணுகிறார். அதே சமயம் இன்னொரு கனவான் உள்ளே நுழைகிறார். உடனே சால்வைக்காரர் ஒரு சிறிய ரதோற்சவப் படத்தை வாங்கிக்கொண்டுவெளியேறுகிறார். ''நல்லகாலம்! அந்தப் பொடியனை அங்கே விட்டிட்டுவந்தன்! இல்லாட்டில் மிட்டாய் அது, இது என்று என்ரை இரண்டு ரூபாவிற்கும் நெருப்பு வைச்சிருப்பான்! சமயாசமயமாக அவன் முருகேசு வந்தானே நான் அவன்ரை தலையிலை பொடியனைக் கட்டிவிட்டுப் பிழைத்தேனே!'' என்று திருப்தியடைகிறார்.

சிறிய படத்தைச் சால்வைக்காரருக்கு அதிக விலைக்கு விற்ற மகிழ்ச்சியினால் முதலாளி அந்தச் சிப்பந்தியிடம் பத்துச் சதத்தைக் கொடுத்து 'டீ' குடித்துவிட்டு வருமாறு அனுப்புகிறான். சிப்பந்தி திருப்தியுடன் ஓடுகிறான். முதலாளி கனவானை நோக்கி, ''என்ன சார் வேணும்?'' என்கிறான். கனவான் கம்பீரமான குரலிலே, 'அந்தப்பெரிய தேர்ப் படம் ஒண்ணேமுக்கால் ரூபாதானே?'' என்று கேட்கிறார். ''எல்லாம் ஒண்ணே முக்கால் ரூபா'' என்று கூறி இவரை ஏமாற்ற முடியாது என முதலாளிக்குத்தெரிந்துவிடுகிறது. ஆகவே மெதுவாக, ''அது விற்கிறதில்லை சார்!'' ... யாரோ சொல்லி விட்டுப் போயிருக்கினம்!'' என்கிறான். ''அப்படியானால் அதை எடுத்து உள்ளே வைப்பதுதானே!'' என்கிறார், கனவான். தன்னுடைய ஜம்பம் இங்கே சாயாது என்றெண்ணிய முதலாளி, ''பரவாயில்லை சார்! நீங்கள் அதை எடுத்துக்கொள்ளுங்க! அவை வந்தால் நான் சொல்லிக்கொள்கிறேன்!'' என்கிறான். வெற்றிப்புன்முறுவலுடன் அதை ஒண்ணே முக்கால் ரூபாவிற்கு வாங்கிவிட்டு வெளியேறுகிறார் கனவான். அவர் முகத்திலே திருப்தி: முதலாளியின் முகத்திலும் திருப்தி. பெரிய படத்தின் கொள்விலை, இரண்டுரூபா; சிறிய படம் ஒருரூபா. ஆனால் முதலாளி இரண்டையும் ஒண்ணேமுக்கால் வீதம் விற்று மூன்றரை ரூபா பெற்றுவிட்டான். அவனுக்கு அரை ரூபா நயம். அதிலே அவனுக்குத் திருப்தி. சிப்பந்திக்கு ஒரு 'டீ' குடித்த திருப்தி. சால்வைக்காரருக்குப் பையனை நண்பரிடம் சேர்த்துவிட்டு நழுவிய திருப்தி, மூவருக்கும் வெவ்வேறு விதத்திலே திருப்தி. ஆனால் அவர்கள் தமக்குக் கிடைத்ததிலேயே திருப்தியடைகின்றனர். கிடைக்காததற்கு அதிருப்தி கொள்ளவில்லை. இதுவும் முருகனின் அற்புதங்களில் ஒன்றுபோலும்.

(யாவும் கற்பனை)

## இயேசு பிறந்தார்

"வீணைக்கொடியோன்''

உலகிற் கென்றே ஒருதனி விளக்காய்
பாலன் அந்நாள் பாரினில் உதித்தான்
மானிடர்க் கென்றே மன்னவர் அந்நாள்
மாட்டுக் கொட்டிலில் மறையோர் சூழ
மழையும் காற்றும் கலந்துடன் வீச
போற்றும் தேவர் பூந்துயிலாட்ட
மாதா மரியாள் மலர் மடிமீது
மானிடனாகி இம்மண்ணிற் பிறந்தார்.

ஃ ஃ ஃ

மலர்தனி உலகில் மாக்களைப்போல
மக்களும் அறத்தை மறந்து போவார்
கயமைகள் இந்நாள் மலிந்து தோன்றும்
கன்னியர் கற்பும் கதையாய்ப் போகும்
கர்த்தர் அந்நாள் கருணையின் உருவாய்
பித்தர் உலகிற் பிறந்திலராஞல்
கலகம் நிறைந்து கருணையும் மறைந்து
உலகம் நூறாய் உடைந்து போயிருக்கும்.

ஃ ஃ ஃ

பாவியற்கென்றே கர்த்தரும் அன்று
பாரினில் பிறந்து சிலுவையில் மரித்து
நாளொரு மூன்றில் நல்லுருப் பெற்றார்
பாவங்கள் உண்மை நீதியைக் கொன்றால்
பரமன் அந்தப் பாவத்தைக் கொல்வார்
நாமிதன் உட்பொருள் நாளும் உணரவும்
நானிலம் முழுதும் நல்லறம் ஓங்கவும்
தேவர் அன்றோர் திருவிளக்கானார்.

ஃ ஃ

இயேசுவின் நாமம் இறைஞ்சிடு வேளையில்
கூசிடும் பாவக் குறைகளைக் களைவோம்
தேசுடன் வாழும் தென்பும் பெறுவோம்
ஊக்கமும் ஆக்கமும் உயர்வும் பெறுவோம்
உண்மையும் வீரஉணர்வும் பெறுவோம்
மக்கள் மனங்களில் மகிழ்ச்சியும் அன்பும்
மிக்க அறங்களும் மேலும் பெருக,
காசினியெங்கும் களிப்புடன் வாழ்வோம்.

ஃ ஃ ஃ

பாரினில் மதங்கள் பலவாய் தோன்றினும்
பாதைகள் நூறாய் பல்கிப் பெருகினும்
வேதங்கள் விரிந்து வேறாய்க் கிடப்பினும்
எண்ணமும் செயலும் எம்மிடைப் பலவாய்
பேதமாய், பிரிவாய், வளர்ந்திருந்தாலும்
நாதமும் இசையும் நாட்டிற்கு நாடு
மாறினும் ஊறினும் மக்களின் வாழ்வில்
ஓதிடும் தெய்வம் ஒன்றென அறிவோம்.

## சிறுகதை (7ம் பக்கத் தொடர்ச்சி)

(7ம் பக்கத் தொடர்ச்சி)

மரண வேதனை; அந்த வேதனையிலும் ஓர் இன்பம் காணுவதுபோன்ற நளினம் அதன் துடிப்பில்.

அவன் காலையில் கடையில் பார்த்தவன்தான். அவன் சிரித்த சிரிப்பின் அர்த்தம் இப்போது அவளுக்கு விளங்கியது. அவன் தான் கொண்டுவந்த பார்சலை அவிழ்த்து அவளிடம் கொடுத்தான். எலிஸிற்கு அந்தக்கணம் உடலும், உள்ளமும் சிலிர்த்தன. மென்குளிர் புகுந்தது போன்ற நடுக்கம் உடலில். அவள் கையில் காலையில் கடையில் விலைகேட்ட படம் இருந்தது.

அதனை அப்படியே நெஞ்சுடன் அணைத்துக்கொண்டாள். மனதில் அலை அலையாக வந்துமடியும் எண்ணங்கள். வேதனையுடன் மகிழ்வும் நெஞ்சைக் குழப்புகிறது. அவள் ஏங்கியபொருள் கையில் இருக்கிறது. அவன் எதிர்பார்ப்பது...?

எலிஸ் உடனேயேஅதனைச் சுவரில் மாட்டினாள். எதிரே தன்னை மறந்து நின்றாள். மங்கிய வெளிச்சத்தில் படத்தில்... அருள் முகமும்... அன்பு விழியும்... பாவிகளை ரட்சிக்கும் பரமபிதா...

அவன் எழுந்து சென்று கதவை அடைத்தான். விளக்குச் சுடர் மூச்சொடுங்கி, துடிப்படங்கி அணைந்து அவிந்தது. குடிசையில் ஒரே இருள். அந்த இருளில் அவள்... அவன்...

சுவரில் தொங்கும் படத்தில், வெள்ளி பிரேமுக்குள் இருந்து அருள் முகத்தால் அன்பு சுடரும் விழிகளால் பார்த்துக்கொண்டிருக்கிறார் யேசு...

கதவு திறந்து கொண்டது. அவன் போய்விட்டான். பிசுபிசுத்தவானம் சோவென மழையைக்கொட்டியது. அத்துடன் காற்றும் சேர்ந்து கொண்டது. இடையே வெட்டிமறையும் மின்னல் அதன் ஒளியில் அவள்—

சுவரில் தொங்கும் படத்தின் எதிரே தரையில் முழந்தாளில் நிற்கிறாள். தலை நிமிர்ந்து அந்த அருள் முகத்தையே பார்த்துக்கொண்டிருக்கிறது. கைகள் தாமரை மொட்டாய்க் கூம்பி இருக்கிறது. விழிகள் கண்ணீர் திரையிட அமைதியாக அவரையே அணைத்துக் கொண்டிருக்கிறது.

வெளியே இடி இடிக்கிறது. மழைகொட்டுகிறது.

—பாவிகளின் ரட்சகரான பரமபிதா அருள் முகத்தில் குறுநகை படரவிட்டு, அன்பு விழிகளால் கருணை பொழிந்து ஆட்கொள்கிறார்—

அவள் நிலைமறந்து அழுகிறாள்.

(யாவும் கற்பனை)


எஸ். அகஸ்தியர்
எழுதிய
நெஞ்சிலிட்ட நெருப்பு
(குறுநாவல்)
2—1—66
ஞாயிறு
இதழ் முதல்
வெளியாகிறது

ராக்ரர்களுக்கு . . .
ராக்ரர் உறுப்புகளுக்கு . . .
இன்னும்
ராக்ரர் றிப்பயர்களுக்கு
ராஜா கோப்பரேஷன்
பரந்தன்

உஷாயர் கிறீக்கோ!! நூற்றுக்குநூறு சுத்தமான
உஷாயர் கிறீக்கோ கோப்பி
ஜோன் கிறீன் கம்பெனியாரால்
உத்தரவாதத்துடன் தயாரிக்கப்பட்டது
நிறம் மணம் குணம் நிறைந்தது
நம்பிக்கையுடன் வாங்குங்கள்
தினமும் உல்லாசமாய் அருந்துங்கள்
ஜோன் கிறீன் அன்ட் கோ.,
86, வோல்ஸ் லேன், முகத்துவாரம்,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை அரங்கம்



# படிக்காத மேதை

‘பராசக்தி’ ஆசி வழங்கியதைத் தொடர்ந்து சிவாஜி கணேசனுக்குத் திரையுலகில் நல்ல ‘மார்க்கட்’ கிடைக்க ஆரம்பித்தது. இவரதுநடிப்பைக் கண்ட ‘பேசும்படம்’ இவருக்கு நடிகர் திலகம் என்ற பட்டத்தை வழங்கியது. இவருடைய அமெரிக்க விஜயம் இவரது புகழுக்கு மெருகூட்டியது. உத்தமபுத்திரனில் இரண்டு வேடம் ஏற்று நடித்தார்; பலே பாண்டியாவில் மூன்று வேடம் ஏற்றுநடித்துசாதனையொன்றை நிலைநாட்டினார். ஆலயமணி, படிக்காத மேதை இரண்டும் இவருக்குப் புகழைத் தந்தன.

கடந்த ஆண்டில் இவரால் தயாரிக்கப்பட்டுவெளியிடப்பட்ட ‘புதியபறவை’ வெற்றிப் படமாக இப்பொழுதும் ஈழத்தில் பவனி வந்து கொண்டிருக்கிறது. இவரது அன்பு மனைவி கமலா, இவர் முன்னேற்றத்துக்கு கைகொடுத்த தெய்வமானார். காமராஜர் மீது அளவுக்கதிகமான பற்றுக் கொண்டவர் கணேசன். அறிஞர் அண்ணாதுரை மீதும் அளவற்ற அன்பு கொண்டவர் இவர்.

பெரியார் ஈ. வே. ராமசாமி மீது கொண்டுள்ள அளவுக்கதிகமான பற்றுக்கு எடுத்துக் காட்டாக அவர் வாழ்க்கையை விரைவில் படமாக்கவிருக்கிறார். சிவாஜி நடித்த ‘‘நவராத்திரி’ பல்லாயிரக்கணக்கான ரசிகர்கள் மனதில் இவரை நிலைக்க வைத்துவிட்டது. ஒன்பது வெவ்வேறு குணாதிசயங்களைக் கொண்ட பாத்திரங்களைத்தாங்கி நடித்துள்ளார். இவர் போல் தமிழ் திரையுலகில் சிறப்பாக நடிக்கக் கூடிய வேறுநடிகர்கள் மிகக் குறைவு. அறிஞர் அண்ணா இவரை ‘மார்லன்பிராண்டோ’வையேமிஞ்சிவிட்டார் என்றுஒருமுறை சொன்னார்.

தன்னை நம்பி வாழ்பவர்களுக்கும், தன்னிடம் பணியாற்றுபவர்களுக்கும் நல்லதையே செய்யும் கணேசன் ஆதரவால் இன்று திரையுலகில் முன்னுக்கு வந்தவர்கள் பலர் இருக்கிறார்கள். ஆனாலும் ‘நான் தான் அவர்களை வளர்த்துவிட்டேன்’ என்று சில நடிகர்களைப்போல் ‘பிரசாரம்’ செய்யும்மூன்றாம்தர குணம்இவரிடம்கிடையாது.

கமலா பிக்சர்ஸ், பிரபுராம் பிக்சர்ஸ், ராஜாமணி பிக்சர்ஸ், சரவணாபிக்சர்ஸ், பத்மினி பிக்சர்ஸ், சாந்தி பிக்சர்ஸ் ஆகிய ஸ்தாபனங்கள் இவர் உதவியால் வாழ்ந்து கொண்டிருக்கின்றன என்று சொன்னால் மிகையாகாது.

‘படிக்காதமேதை’ சிவாஜி கணேசன் உயிரோடு இருக்கும் வரை தமிழ்படவுலகில் ஏறுநடைபோடுவார் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

## எம். ஜி. ஆர். நாரதராகிறார்!

‘மக்கள் திலகம்’ எம். ஜி. ஆர். ‘நாரதர் வேலை’கள் செய்யப்புறப்பட்டுவிட்டாரென்ற செய்தி ரசிகர்களுக்கு ஆச்சரியமாகத்தானிருக்கும். ஆனால் எம். ஜி. ஆர். அவர்களே தன் வாயாலேயே வெளியிட்டுவிட்டாரே!

‘‘சங்கரதாஸ் சுவாமிகள் எழுதிய ‘அனுசூயா’ என்ற நாடகத்தில் நான் நாரதராக நடிக்கவிருக்கிறேன். இந்த நாடகம் ஜனவரி மாதம் தமிழ் நாடெங்கிலும் நடத்தப்படும்,’’

-சென்னைமுதலமைச்சர் பக்தவத்சலம் தலைமையில் நடந்த விழாவொன்றில் எம். ஜி. ஆர். பேசுகையிலேயே மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

## அடுத்த இதழில்

அண்மையில் ஈழத்துக்கு விஜயம் செய்து பல்லாயிரக்கணக்கான ரசிகர்கள் இதயங்களைக் கொள்ளை கொண்ட ‘மக்கள் திலகம்’ எம். ஜி. ராமச்சந்திரனின் வாழ்க்கை வரலாற்றை அடுத்த இதழில் சுவைப்பட தொகுத்து எழுதுகிறார் ‘சினிமாப் பித்தன்.’ இதுவரை அவரைப் பற்றி வெளிவராத புதிய அம்சங்கள் பல இடம் பெறும்.

# நட்சத்திர மொழி

கலைவாணரது பரம்பரைக்குப் பிறகு நான் பல படங்களில் நடித்திருந்தாலும் பெருமைப்படும்படி இல்லை. பிறகு வந்த கதாநாயக நடிகர்கள் பலவித மனப்பான்மைகளினாலும், போட்டி பொறாமைகளினாலும் உலுப்பப்பட்டார்கள். அவர்களுக்குள் கோஷ்டி மனப்பான்மை குடிகொண்டது. அதன் காரணமாக வேண்டியவர்கள்-வேண்டாதவர்கள் என்ற இரு பிரிவினர் ஏற்பட்டனர். மேற்கண்ட பூசல் மனப்பான்மைகளினால் உண்மையாகத் திறமைகொண்டவர்கள் அவதிப்பட நேரிட்டது. அப்படிப்பட்ட அவதிகளில் நான் அதிகமாக சிக்கவில்லை என்றாலும் இப்பொழுது படவுலகம் போய்க்கொண்டிருக்கும் போக்கைக்கண்டு வருத்தப்படுகிறேன்.

—பாலையா

நேயர்கள் பேசுகிறார்கள்

## கதைப் பஞ்சமா?

இன்று வெளியாகும் திரைப்படங்களை நாம் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது அப்படத்திலே வரும் காட்சிகள் முன்புநாம் பார்த்த படங்களை நினைவூட்டுகின்றன. திரைப்பட அதிபர்கள் படங்களை வெளியிடுவதில் போட்டி போட்டு திரைப்படங்களை அடுத்தடுத்து வெளியிடச்சிரத்தை கொள்கிறார்களே தவிர தரமான படங்களைத் தயாரிக்கத்தவறிவிடுகிறார்கள். தொடர்ந்துபடங்களை வெளியிடவேண்டுமென்பதற்காக பிறபாஷைகளிலுள்ள கதைகளைத் தழுவி திரைப்படங்களைத்தயாரிக்கிறார்கள். ஏன் தரமான கதைகளை அடிப்படையாகக்கொண்டு படங்களைத்தயாரிக்க கதைப்பஞ்சமா?

க. கனகலிங்கம்
கோண்டாவில்.

## ‘தாய்நாட்டு மண்’

நத்தார் பண்டிகையை முன்னிட்டு யாழ். அமெச்சூர் நாடகக்குழுவினர் இன்று இரவு 6-30 மணிக்கு ‘தாய்நாட்டு மண்’ என்னும் நாடகத்தை மானிப்பாய், மெமோரியல் ஆங்கில பாடசாலையில் மேடையேற்றவிருக்கின்றனர்.


நியூ
காலிங்கன் சினிமா
(இணுவில்)
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நடித்த
நீதிக்குப் பின் பாசம்

ராஜா
(யாழ்ப்பாணம்)
2-30 6-30, 9-45 சனி-ஞாயிறு 10-30
S பாலச்சந்தர் - விஜயலக்ஷ்மி
நடித்த
பொம்மை

REGAL—JAFFNA
NOW SHOWING
John F. Kenneby
Years of Lightning
Day of Drums
Also; Clay-Patterson
Boxing Fight News


# புரட்சி நடிகரின் புதுவருட திட்டம்!

## உலகமார்க்கெட்டுக்காக கூட்டுத் தயாரிப்பு

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். உலகமார்க்கெட்டுக்காக இரு வெளிநாட்டு திரைப்படநிலையங்களுடன் கூட்டு சேர்ந்து அடுத்த ஆண்டில் ஒரு படத்தைத் தாமே டைரக்ட் செய்து, தயாரிக்கவிருக்கிறார்.

மேற்கூறிய கூட்டுத் தயாரிப்புக்கான திட்டம் இன்னும்இறுதியாக்கப்படவில்லையெனினும் அப்படம் ஒரு தேசாந்தரியின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டதாக இருக்குமென்றும், அதில் இந்தியாவைச் சேர்ந்த நட்சத்திரங்களும் மற்றும் வெளிநாட்டு நட்சத்திரங்களும் நடிப்பார்களென்று நம்பப்படுகிறது.

அப்படத்தில் எம். ஜி. ஆர். முக்கிய பாகத்தில் நடித்து தானே அதைடைரக்ட்செய்வார் எனத் தெரிகிறது. கால்நடையாக உலகப் பயணம் செய்யும் ஒரு இந்தியரின் கதையை அப்படம் விவரிக்குமாம்.

படத்தயாரிப்புக் குழுவினர் வெளிப்புறக் காட்சிகளைப்பிடிக்கப் பலநாடுகளுக்கும் செல்வர். படத்தை



எடுத்துமுடிக்க ஓராண்டு பிடிக்கலாம்.

படத்தயாரிப்பு உரிமைக்காக இந்திய அரசாங்கத்திடமும், மற்றும் பல நாடுகளின் அரசாங்கங்களிடமும் அனுமதிகோரப்பட்டுள்ளது

## ‘தங்க வளையல்’ தயாராகிறது

சேலம் ரத்னாபடப்பிடிப்பு நிலையத்தில் ‘தங்கவளையல்’ படம்துரிதமாகத்தயாரிக்கப்பட்டு வருகிறது.

மன வேதனை கொண்ட தகப்பனாராக ஜெயசங்கர் நடிக்கிறார். பேபி ஷகீலா அவருடைய குழந்தையாக நடிக்கிறார். கே. ஆர். விஜயா, மீரா, வி. கே. ராமசாமி, எஸ். வி. சுப்பையா, கே. மாலதி ஆகியோரும் நடிக்கின்றனர்.

இளம் எழுத்தாளரான சேலம் நடராஜன் கதை, வசனம் எழுதியுள்ளார். கே. வி. மகாதேவன் இசையமைத்துள்ளார். ஏ. வி. இராஜேந்திரன் டைரக்ட் செய்து வருகிறார்.


10-வது வெற்றி வாரம்!
கிங்ஸ்லி (கொழும்பு) விஜிதா (ஹட்டன்) மொடேர்ன் (பதுளை)
மொடேர்ன் (பண்டாரவளை)
எம். ஜி. ஆர். — சரோஜாதேவி
நடிக்கும்
எங்கவீட்டுப் பிள்ளை

இப்பொழுது நடைபெறுகிறது
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30.
பத்தினிப் பெண் சிந்தைக்கினிய கிளி!
சீறி எழுந்தால் புலி! எனும் இலக்கணம் உருவாக்கிய
சீரிய தலைவி கண்ணகியின் வரலாறு.
எஸ். எஸ். ஆர். — விஜயகுமாரி
கே. பி. சுந்தராம்பாள்,
ராஜஸ்ரீ, நாகேஷ் - மனோரமா, ஓ. ஏ. கே. தேவர்
மற்றும் பலர் நடிக்கும்
பூம்புகார்
டைரக்ஷன் — நீலகண்டன்.
கதைவசனம் —மு. கருணாநிதி.
இசை — சுதர்சனம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்ததானம் செய்யத் தயங்கும் கணவன்மார்!

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியிலுள்ள இரத்த வங்கியில் போதுமான அளவு இரத்தம் கைவசம் இருந்த போதிலும் நெருக்கடியான வேளைகளில் நோயாளர்களது உறவினர்களின் விபரீதமானபோக்கினுல் இரத்த வங்கி அதிகாரிகளுக்கு சங்கடமான நிலைஏற்பட்டு விடுவதாகக் கூறப்படுகிறது.

பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்படும் நோயாளர்களுக்கு ஆபத்தான வேளைகளில் இரத்தம் தேவைப்பட்டால் அவர்களுக்கு உடனடியாக இரத்தம் கொடுக்கப்படுகிறது. ஆனுல் அந்த நோயாளர்களுக்கு பொருந்தக்கூடிய இரத்தத்துக்கு இரத்தவங்கியில் சிலவேளைகளில் தட்டுப்பாடு நிலவினுல் குறிப்பிட்ட நோயாளரின் உறவினர்கள்கூட இரத்தம் கொடுக்க முன்வருவதில்லையாம். இதனுல் நோயாளரின் நிலை ஆபத்துக்குள்ளாவதுடன் டாக்டர்களுக்கும் தர்மசங்கடமான நிலை ஏற்பட்டுவிடுவதாக சொல்லப்படுகிறது.

இதுபற்றி யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி டாக்டர் ஒருவர் தெரிவிக்கையில்; ஆபத்தான நிலையிலிருக்கும் மனைவிமாருக்குக்கூட (குறிப்பாக பிரசவ தாய்மாருக்கு) அவர்களது கணவன்மார்கள் இரத்தம் கொடுக்கப் பயப்படுகிருர்கள் என்றும் இப்படியான நிலையில் பெண் நோயாளரின் நிலை கவலைக்கிடமாகி மரணம்கூட ஏற்பட்டுவிடுகிறதென்றும் கூறினுர்.

இரத்தம் கொடுத்தால் நோய்வரும் உயிருக்கு ஆபத்துஏற்படும்என்றுகருதி இவர்கள்இரத்தம் கொடுக்க முன்வருகிருர்களில்லை என்றும் அந்த டாக்டர் கவலை தெரிவித்தார்.

ஆபத்தான வேளைகளில் கணவன்மார்களே தங்களது மனைவிமாருக்கு இரத்தம் கொடுக்கத்தயங்கினுல், ஆஸ்பத்திரி டாக்டர்களினுல்கூட ஒன்றும் செய்யமுடியாத நிலைமை சில வேளைகளில் உருவாகிவிடுகிறதாம்!

— —

## பிரேரணை பட்டபாடு!

சாவகச்சேரி, சனி

சாவகச்சேரி நகரசபையில் ஆளும்கட்சி அங்கத்தினரால் கொண்டுவரப்பட்ட பிரேரணையொன்று எதிர்க்கட்சியைச் சேர்ந்தவரின் ஒரேயொரு வாக்கை மட்டும்பெற்றுப் படுதோல்வியடைந்த சம்பவம் நகரசபையின் மாதாந்தக்கூட்டத்தில் நடைபெற்றது.

திரு. ஆர். டி. சிவகுரு தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பிரேரணை கொண்டுவர முன்னறிவித்தல் கொடுத்த 7ம்வட்டார அங்கத்தவர் திரு. வி. ரி. இராசையா சமூகமளிக்காததால் அப்பிரேரணையை திரு. கே. பொன்னுத்துரை பிரேரிக்க, திரு. எஸ். ஆறுமுகம் அனுவதித்தார்.

சாவகச்சேரி நகரசபை 7ம் வட்டாரத்திலிருக்கும் படமாளிகை ஒன்றுக்குத் தற்போதுள்ள தற்காலிக லைசென்ஸைத் தொடர்ந்து நீடித்து வழங்கவேண்டாமென்று அப்பிரேரணையில் கூறப்பட்டிருந்தது.

இப்பிரேரணையைப் பிரேரித்து அனுவதித்தவர்கள் கூடப் பாதகமாக வாக்களித்தனர். 10ம் வட்டார அங்கத்தவர் திரு. சு. கனகரத்தினம் மட்டுமே சாதகமாக வாக்களித்தார். பாதகமாக 7 வாக்குகளும் சாதகமாக ஒரு வாக்கும் பெற்றுப் பிரேரணை தோல்வியடைந்தது.

## உபதபாற்கந்தோர் திறக்க கோரிக்கை

வவனியா, சனி

வவனியாத் தொகுதியில், மிகவும், முக்கியமும் அவசியமுமான மூன்று ஸ்தானங்களிலும் உபதபாற் கந்தோர்கள் திறக்கப்படவேண்டுமென பொதுவேலை மராமத்து தபால் தந்தி அமைச்சரிடம் வவனியா எம். பி. வேண்டுகோள் விடுத்துள்ளார். வவனியாத் தொகுதிக்கு அத்தியாவசியமான தபால், தந்தித் தேவைகள் கடந்த நான்கு ஆண்டுகளாக தொடர்ந்து வலியுறுத்தப்பட்டும் பலனளிக்கவில்லை எனவும் ஒவ்வொரு ஆண்டும் வவனியா மாவட்ட இணைப்புக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டு அனுப்பப்பட்ட கோரிக்கைகள் இதுவரை நிராகரிக்கப்பட்டுள்ளது எனவும், பிரதிநிதியின் மகஜரில்சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. குறித்த தேவைகள் அன்று இருந்ததிலும் பார்க்க இன்று மிகவும் அத்தியாவசியமானது எனவும் இனி மேலும் தாமதமின்றி நொச்சிமோட்டை, பம்பைமடுச் சந்தி, ஆண்டியா புளியங்குளம் ஆகிய மூன்று இடங்களிலும் உபதபாற்கந்தோர்கள் உடனடியாக திறக்கப்படுவதற்கு அங்கீகாரம் கொடுக்கப்படல் வேண்டுமெனவும், கேட்கப்பட்டுள்ளது.

— —

## ரொடீஷியா பற்றி பிரதமர்

பம்பலப்பிட்டி, சனி

சட்டபூர்வமற்ற ரொடீஷிய புரட்சி அரசாங்கத்துக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் ஒரு முடிவுகட்டாவிடில் ஆபிரிக்காவுக்கு மட்டுமின்றி உலக சமாதானத்துக்கே இதனுல் பெரும் கேடுநேரிடும் எனப் பிரதமர் திரு டட்லி சேனநாயக்கா ஜனப் பிரதிநிதிகள் சபையில் நேற்று தெரிவித்தார்.

தென்ரொடீஷிய பெரும்பான்மை மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் பிரிட்டன் கடும்நடவடிக்கை உடன்மேற்கொள்ளவேண்டுமென நாம் வற்புறுத்துகின்ரேம்' என்றும் பிரதமர் கூறினுர்.

**சங்கானை**

# பட்டினசபைத்தலைவர் ராஜினுமா கடிதம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

சங்கானை பட்டினசபைத் தலைவர் திரு, க. அம்பலவாணர் தமது ராஜினுமாக் கடிதத்தை ஸ்தல ஸ்தாபன உதவிக் கமிஷனர் திரு. எஸ். சி. மாணிக்கவாசகரிடம் சமர்ப்பித்துள்ளார்.

இம்மாதம் 31-ம் திகதியிலிருந்து தமது தலைவர் பதவியை ராஜினுமா செய்வதாக திரு. க. அம்பலவாணர் இக்கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

திரு, க. அம்பலவாணர், முன்னர் செய்துகொள்ளப்பட்ட "கனவான்கள் ஒப்பந்தத்தின்" பிரகாரமே இப்பொழுது ராஜினுமா செய்வதாகக் கூறப்படுகிறது. இந்த ஒப்பந்தம் வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ.அமிர்தலிங்கம்முன்னிலையில் கைச்சாத்திடப்பட்டிருந்தது.

— —

## வள்ளலார் நினைவுவிழா

கோண்டாவில், சனி

"காலத்திற்குக்காலம் நீதி வழுவாத நெறிமுறைகள் குன்றி மனிதகுலம் முன்னேற்றம் அடைவதில் மந்த நிலையாகக் காணப்படும் காலங்களில், உலகில் மகான்கள் தோன்றுவது இயற்கை. இவர்கள் வரிசையில் முதன்மை வாய்ந்தவர் வடலூர் வள்ளலார் இராமலிங்க சுவாமிகள். மக்களின் உள்ளங்கள் உயர்நிலைபெற பல அரிய உயர்நெறிகளை அவர் மனிதகுலத்திற்கு வாரிவழங்கியுள்ளார்".

"மாத்தறைத் தமிழர்மன்றத்தினுல் முருகன் ஆலயத்திற்கு அண்மையிலுள்ள கதிர்காம யாத்திரீகர்கள் மடத்தில் நடாத்தப்பெற்ற வள்ளலார் இராமலிங்கசுவாமிகள் நினைவுவிழாவின்போது மாத்தறைக் கச்சேரி அலுவலக உத்தியோகஸ்தர் தி. அ. சீவரத்தினம் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினுர்.

மன்றச் செயலாளர் திரு. சு. புண்ணியலிங்கம் நன்றி தெரிவித்துப் பேசுகையில், விழா எடுப்பதில் மாத்திரம் எமது கடமைகள் முடிவடைந்துவிட்டது என்றுநாம் கருதாது, அவர்காட்டிய நல்வழிகளைகடைப்பிடித்தொழுகுவதே நாம் அவர்களுக்குச் செய்யும் கடமையாகும் என்று குறிப்பிட்டார்.

## பதின்மூன்ருவது ஆண்டுவிழா

சுன்ஞகம், ஞாயிறு

"சிங்களமொழியை இலங்கையின் ஆட்சி மொழியாக சகலகட்சிக்காரர்களும் ஏற்றுக்கொண்டுவிட்டார்கள். சிறப்பாக வடக்கு கிழக்கு மாகாணப் பிரதிநிதிகளே வரவேற்றுள்ளனர். எமது தமிழ்மொழியை அழியவிடாது சிங்கள மொழியையும் கற்று முன்னேறுவதே சிறந்ததாகும்". இவ்வாறு அளவெட்டி தெற்கு முற்போக்கு வாலிபர்சங்க பதின்மூன்ருவது ஆண்டுவிழாவில் அகில இலங்கை சிறுபான்மைத்தமிழர் மகாசபை நிர்வாகக்காரியதரிசி திரு. சி. செல்லையா பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. எஸ். சின்னத்தம்பி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பண்டிதர் நாகலிங்கம், திருவாளர்கள் வ. பொன்னம்பலம், எஸ். ஆறுமுகம், ஆ. நல்லையா, சின்னையா ஆகியோரும் பேசினுர்கள். முற்போக்கு வாலிபர் சங்கத்தின் 'கண்டி அரசன்' நாடகமும் நடைபெற்றது.

## 'வகுப்புவாதத்தை மறந்துவிடுங்கள்'

### நாவலப்பிட்டி முன்னுள் எம். பி.

நாவலப்பிட்டி, சனி

"தேர்தல்காலத்தின்போது எல்லாம் பல அரசியல் வாதிகள் வகுப்புவாதத்தைக் கிளப்பிவிடுகிருர்கள். இவ்வித தந்திரத்தை நான் எனது 30 வருட அரசியல் வாழ்வில் கையாண்டது கிடையாது எனக் கூறிக்கொள்வதில் நான் பெருமையடைகிறேன்."

இவ்வாறு நாவலப்பிட்டி முன்னைநாள் எம். பி.யும், நாவலப்பிட்டி நகரசபையின்முன்னுள் தலைவருமான திரு ஆர். ஈ. ஜெயத்திலகா நாவலப்பிட்டி நகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் பேசுகையில் கூறினுர்.

நாட்டுக்கு ஆற்றவேண்டிய சேவையைக் கருத்தில் கொண்டுஅரசியல் வாதிகள் எல்லோரும் வகுப்புவாதக் கொள்கைகளை மறந்துவிடவேண்டுமெனத் தாம் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

———

## கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

இன்று பொன்னுலை வரதராஜப் பெருமாள் கோவில் மார்கழி உற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து பத்து நாட்களுக்கு விழா நடைபெறும். பிரமஸ்ரீ ச. சுப்பிரமணியக் குருக்கள் பிரதம குருவாக இருந்து விழாவை நடாத்திவைப்பார்.

———

## கிறிஸ்மஸ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டதற் கிணங்க அமெரிக்காவும் வடக்கு வியட்னுமும் 12 மணிநேரம் போர்நிறுத்தத்தை அமுல் செய்ய உடன்பட்டன.

### சிறு சம்பவம்

நேற்று நள்ளிரவிலிருந்து போர்நிறுத்தம் பூரணமாகக் கடைப்பிடிக்கப்பட்டது. ஆனுல் யுத்தநிறுத்தம் ஏற்பட்ட சில நிமிடங்களில் ஒரு சிறு சம்பவம் மட்டும் நிகழ்ந்தது. சைகோனிலிருந்து 350 மைல் வடக்கே அமெரிக்க விமானத்தளம் ஒன்றின்மீது வியட்காங்கினர் குண்டுகளால் தாக்கினர் என்றும் இத்தாக்குதலின்போது அமெரிக்கத் துருப்புகள் திருப்பிச் சுடவில்லையென்றும் பொருட்சேதமோ உயிர்ச்சேதமோ இல்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையேஉலகத்தலைவர்கள் அமெரிக்காவுக்கும் வடக்கு வியட்னுமுக்கும் இன்று மீண்டும் சமாதான கோரிக்கை விடுத்தனர். போர் நிறுத்தத்தைத் தொடர்ந்து அமுல் செய்யுமாறும், பேச்சுவார்த்தைகளின்மூலம் வியட்னும் நெருக்கடிக்கு தீர்வொன்றைக் காணுமாறும்இவர்கள்கோரியுள்ளனர்.

ஆனுல் கிறிஸ்மஸ் போர் நிறுத்தம் முடிவடைந்த மறுநிமிடம் இரு பகுதியினரும் தாக்குதல்களை ஆரம்பிக்கலாம் என்று பார்வையாளர்கள் கருத்து வெளியிடுகின்றனர்.

# "தீர்மானத்தை அமுல்செய்க"

## சுன்ஞகம் பட்டினசபைக்கு கோரிக்கை

சுன்ஞகம், சனி

சுன்ஞகம் சந்தை ஐக்கிய முன்னேற்றச் சங்கத்தின் மாதாந்தக்கூட்டம் திரு. ச. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பின்வரும்தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன:

பட்டினசபையோடு சிறுபான்மைத் தமிழர் மகாசபை பேட்டிகண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை அமுல் நடத்துவதுபற்றி பட்டினசபை சிறிதும் அக்கறை எடுக்காமல் இருப்பதைக் கண்டித்து, உடனடியாகப்பட்டினசபை, சிறுபான்மைத்தமிழர் மாசபையுடன் செய்துகொண்ட தீர்மானங்களை அமுல் நடத்தும்படி வேண்டுதல்.

தற்போது எட்டுவீதப்படி அறவிடப்படும் சோலைவரியை உடனடியாகக் குறைக்கும்படி பட்டினசபையை வேண்டுதல்.

லங்கா சமசமாஜக்கட்சி வாலிபமுன்னணி, புரட்சிவாத சமசமாஜ வாலிப முன்னணி, சீனக்கம்யூனிஸ்ட் வாலிபமுன்னணி, மாஸ்கோ கம்மூனிஸ்ட் வாலிப முன்னணி, தமிழரசு வாலிபமுன்னணி ஆகியன அங்கம் வகிக்கும் இச்சங்கத்தில் மேற்படி இரு தீர்மானங்களையும் புரட்சிவாத சமசமாஜ வாலிபமுன்னணி கொண்டு வந்திருந்தது.

———

## உடற்பயிற்சி போட்டிகள்

மாவிட்டபுரம், சனி

பருத்தித்துறை, ஒலிம்பிக் விளையாட்டுக்கழகத்தின் ஆதரவில் இன்று ஞாயிற்றுக்கிழமைமாலைபருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவிருந்த உடற்பயிற்சிப்போட்டிகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. தற்போது நடைபெறும் உயர்கல்விப் பரீட்சைகளுக்காகவே போட்டிகள் ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றன.


### விற்பனைக்கு

ஆனைக்கோட்டை சந்திக் கருகாமையில், குடியிருப்பதற்கு, நல்ல சூழ்நிலையில் அமைந்த தென்னை முதலிய பிரயோசனமுள்ள ஆறுபரப்புக்காணி விற்பனைக்குண்டு. கிணற்றுப் பங்கு, மின்சாரவசதி முதலியன உண்டு. யாழ்ப்பாணம் நகரிலிருந்து மூன்றுமைல்தூரம். விபரங்களுக்கு: திருமதி வெற்றிவேலு, 20 A, அம்மன் வீதி, கந்தர்மடம் அல்லது செ.சிவசம்பு, 11, ஹரிச்சந்திர மாவத்தை, பாமன்கடை, கொழும்பு-7. 1638

### வாடகைக்கு

சகல நவீன வசதிகளுடன் கூடிய விசாலமான வீடும் காணியும் வாடகைக்குண்டு. பரமேஸ்வராக் கல்லூரிக்கு அருகாமையில் நாச்சிமார் கோயில் வீதியில் 56-ம் இலக்க வீடு. தொடர்பு கொள்ளவும். வே. விஞசித்தம்பி, பிறக்றர் & நொத்தாரிசு, கோண்டாவில். 1639

### விற்பனைக்கு

CN 4000தொடர்வரிசையிலுள்ள A 40 கார் விற்பனைக்குண்டு. பற்றறி, ரயர்கள் புதியன. என்ஜின் அண்மையில் புதுப்பிக்கப்பட்டது. சனி, ஞாயிறில் 158; சட்டநாதர் வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் பார்வையிடலாம். 1640

### கல்வி

பீ. ஏ., ஜீ. ஏ. கியு., ஜீ.சீ. ஈ.உயர்தர, சாதாரணதர கலை, விஞ்ஞான, வர்த்தக தமிழ்-ஆங்கில வகுப்புக்களும், சிங்களம், ஜே. எஸ். சி., பண்டித வகுப்புக்களும், காலை, மாலை நேரங்களில் நடைபெறுகின்றன. உடனே சேருங்கள். 1966-ம் ஆண்டுக்குரிய மேல்காண் வகுப்புக்கள் தை 3-ல் ஆரம்பமாகின்றன. யாழ்ப்பாண டியூட்டோறியல் கல்லூரி, கைலாசபிள்ளையார் கோவிலடி, நல்லூர், யாழ்ப்பாணம். 1641


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி: 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ம்திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org